# முரசொலி

2 அணா

மு. கருணாநிதி

முரசு 1 | சென்னை 17 — 9 — 54 வெள்ளி | ஒலி 25





## 'கவிதையல்ல - எழுச்சி ஏடு!

★

காவிரி தந்த தமிழகத்துப் புது மணலில்
களம்அமைத்துச்சேர சோழ பாண்டி மன்னர்
கோபுரத்துக் கலசத்தில் யார் கொடிதான்
—பறப்பதென்று
போர் தொடுத்துக் கொண்டிருந்த காலமது!
அந்நாளில், ஓர் களத்தில்
தாவிப் பாய்ந்து செத்தார் தந்தை என்ற
சேதி கேட்டு,
தாயகத்தை மீட்பதற்குத் தன் கணவனையும்
அனுப்பி வைத்தாள்,
பார் முழுதும் வீரம்பாடும் புறப்பாட்டு
மறத்தி யொருத்தி!

அந்தோ,
மாவிலைத் தோரணங்கட்டி மணவிழா
மேடை தன்னில்
வாழ்விலே ஒன்றானோம் என்று சொன்ன
கண்ணாளன்,
மார்பிலே வேல்தாங்கி நல்ல சாவிலே
வீழ்ந்து விட்டான்-
ஆவிதான் போன பின்னும் உயிர்வாழும்
ஆரணங்கு

அச்சடித்த தமிழ்ப் பதுமை!
கூவியழைத்துக் குமாரன் தன்னை—
சீவி முடித்துச் சிங்காரித்து — ரத்தக்
காவி படிந்த வாள் கொடுத்து,
சென்று வா மகனே! செருமுனை நோக்கி என

வாழ்த்தி விட்ட காட்சி தான் என்ன
— காட்சி!

— கருணா

★

# பந்தம் ஏந்துகிருர் பிரகாசா!

### விநோத வியாக்யானம்!

★

தேனுற்ருக இருந்தாலும் தேடுவாரற்றுப் போனுல் அது தூர்ந்து போகும். பூங்காவாக இருந்தாலும் புழக்கமும் கண்காணிப்பும் இல்லாது போனுல் பூங்கா புதராகி விடும்.

இந்த உண்மையை சாதரணமக்கள் கூட புரிந்து கொள்வார்கள் — ஆனுல் நிதிமந்திரி சுப்ரமணியம் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. 8ம் தேதியன்று தருமபுரத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்; தமிழ் பலவீனமான மொழியல்ல; வடமொழி கற்பதால் தமிழ் வளர்ச்சி குன்றிவிடாது; தமிழ் தளர்ச்சியடையாத மென் மேலும் வளரக்கூடிய ஒரு மொழி. தமிழில் நம்பிக்கையில்லாதவர்கள்தான், தமிழின்பெருமையை அறியாதவர்கள்தான், தமிழை உண்மையாக உணராதவர்கள்தான் பிறமொழியை வெறுப்பர்" என்பதாக.

தமிழைக்காப்பவர்களெல்லாம் பிறமொழிகளை வெறுப்பவர் என்பதாக அமைச்சர் பேசியிருக்கிருர். பெற்றுவளர்த்த அன்னையை பேணிக்காப்பது மற்ற பெண்டிர்களை வெறுப்பதாக அர்த்தம் போலும் — அமைச்சரின் கருத்துப்படி! இதன்மூலம் தன்னை, பிறமொழியை வெறுக்காத தமிழ்காவலன் என்றும், பறைசாற்றிக் கொள்ள முனைந்திருக்கிருர் அமைச்சர் சுப்ரமணியர் — உண்மையிலேயே நிதி அமைச்சர் தமிழ்காவலராலுல், சென்றசட்டசபையில் வள்ளுவர் நாள் குறித்து கேள்வி எழுந்த போது, 'ஏன் இந்த வீண் ஆராய்ச்சி' என்று ஏன் இருமாப்போடு பதில் கூறவேண்டும்? சொல்லியிருக்கலாமே, 'ஆராய்வோம் வாருங்கள்' என்று. அமைச்சரின் தமிழ்பற்று இங்கேயே அம்பலமாகி விட்டதே! பிறமொழி கலப்பால் தமிழ் கெட்டுவிடாதாம்! பிதற்றுகிருர் சுப்ரமணியம்!

'கல்விக் கொள்கை எவ்வாறு இருக்க வேண்டும் என்று கூறும் உரிமை மக்களுக்கே இருக்க வேண்டும். எத்தகைய கல்விதருவது என்று முடிவு செய்யும் வேலையை கல்வி நிபுணர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டாம். நோயாளிதான், தனக்கு யார் வைத்தியராக இருக்கவேண்டும் என்று நிர்ணயிக்க வேண்டுமே தவிர, வைத்தியர் நோயாளியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளக் கூடாது."

யார் இந்த விவேகி? புதிய கல்வித் திட்ட எதிர்ப்பு காலத்தில் புரட்சி இயக்கத் தலைவர்கள் எழுப்பிய புயல் வேகச் சொற்பொழிவின் ஒருபகுதியா இது? இதுபோன்ற ஐயங்கள் தான், மேலே காணப்படும் கல்வி பற்றிய கருத்துக் கண்டதும் உங்களுடைய உள்ளங்களில் முளைவிடும்! ஏன்? உங்களுடைய உள்ளங்களில் மட்டுமல்ல — யாருடைய மனதிலும் இப்பேர்ப்பட்ட சந்தேகச் சூருவளிகள் வீசுவது இயற்கைதான். நீங்களெல்லாம் வியப்புறுவீர்கள், இந்தப் பொன்மொழிகளை திருவாய் மலர்ந்தருளியவர் யார் என்று சொன்னுல்! கல்வித் திட்ட எதிர்ப்புப் படை களம் குதித்த நேரத்திலெல்லாம் கண்மூடி மவுனியாக இருந்தவர், தியாகராயநகர் திருவீதிகளில் தடிகளால் தாக்கப்பட்டு தமிழர் படை "தாளமுத்து நடராசா" என்று தரையிலே வீழ்ந்த நேரத்திலே 'தங்கபஸ்பம்' உண்டு தென்றல் பவனத்தில் தியானத்திலே ஆழ்ந்திருந்தவர் —அவர்தான், அந்த கவர்னர் பிரகாசாதான் அவ்வாறு பேசியிருக்கிருர் கல்விக் கொள்கையில் அரசாங்கம் தலையிடக் கூடாது என்று. ஒரு நாட்டின் கல்விக் கொள்கையில் ஆளும் வர்க்கம் குறுக்கிட்டால் — அவ்வாறு குறுக்கிடும் உரிமையை அவர்களுக்கு அளித்தால், அடிக்கடி மாறுகிற ஆட்சிபீடம் தன் இஷ்டத்திற் கேற்ருர்போல் கல்வித் திட்டத்தையும் மாற்றத்தான் முனையும்" என்று நாம் அந்த வேளையில் — போராட்ட காலத்தில் எடுத்துரைத்ததெல்லாம் அந்த பெருமானுக்கு காதில் ஏருது, இப்போது மட்டும்திடீர் ஞானேதயம் தோன்றக் காரணம் என்ன? தனக்குள்ள வில்வெட் குடையை விற்கப் போகிருர்கள்; வீதியை அலங்கரித்துச் செல்லும் கோச்வண்டியை விற்கப் போகிருர்கள் என்று மட்டும் வாய்விட்டுக் கதறிய பூமான், நாட்டுமக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் கல்வித் திட்ட பிரச்சினையில் மட்டும் ஏன் அன்றுமவுனமாகஇருந்தார்? மலர்ச்சோலையில் அசைந்தாடும் மயில் கூட்டத்தின் சிறகைச் சிதைத்திட எண்ணும் மாபாவியை மாய்க்கா விட்டாலும் மரத்தின் உச்சியிலிருந்து ரசித்துக் கொண்டாவதிருக்கலாம் என்பது தானே அவருடைய எண்ணமாக இருந்திருக்கவேண்டும்! அப்போது மட்டும் வைத்தியர் நோயாளி ஸ்தானத்திற்கு வந்திருக்கிருர்.

அதுமட்டுமல்ல; கவனர் பிரகாசா சென்ற வாரம் கோவைப் பகுதியில் பேசும் போது இன்னும் இரு கருத்துக்களையும் கக்கி விட்டிருக்கிருர்

"கல்வி நிலையங்கள் தோடங்கும் போது அரசாங்கத்தின் பண உதவியை எதிர் பார்க்காது இருப்பதே நல்லது. கோஞ்ச நஞ்சம் பணம் அரசாங்கம் கோடுத்தாலும் அத்துடன் அதனுடைய கட்டுத் திட்டங்களையும் அது புகுத்தும், வணிகர்கள் தங்கள் வாணிபத்தில் அரசாங்கத் தலையீட்டை விரும்புவதில்லை"

கல்விச்சாலைகள் வாணிபக் கூடாரங்களாம்! வடக்கத்திக் கோமான் செப்புகிருர்! கல்வி நிலையங்களுக்கு சர்க்கார் பண உதவி செய்தால், அது கல்வி நிலைய அதிகாரங்களை விலை கொடுத்து வாங்குவதற்கு சமமாம்! ஜாடையாகச் சொல்லியிருக்கிருர் பிரகாசா. பூமிக்குப் பாரமாகிவிட்ட மனிதனின் மெய்க்காப்பாளன் அரசாங்கம் தான் என்பது சமுதாய ஒப்பந்தத்தின் ராஜ இலக்கணம். அதை பகிரங்கமாகக் கொலை புரிகிருர்; தீயிட்டுப் பொசுக்க பந்த மேந்துகிருர் கவர்னர் திருமகன். கல்வியின்தரம் உயர வேண்டுமென்று உண்மையான நோக்கருந்தால், போதிக்கப்படும் கல்வியைப் பொறுத்துத்தான் பாதிக்கப்படும் நாட்டின் எதிர்காலம் இருக்கிறது என்ற பேருண்மையை உணர்ந்திருந்தால், பாராள்வோரின் பண உதவியை எதிர்பார்க்கும் பாடசாலைகள் தங்களின் அதிகாரத்தை பணயமாக வைக்க வேண்டும் என்று கவர்னர் சொல்லுவாரா? அது தான் முறையென்ருல் சர்க்கார் தான் ஏன்? நீதியின் போரால் அரசியல் சட்டங்கள்தான் ஏன்? கல்வி விஷயத்தில் சர்க்கார் தலையிடக்கூடாது என்ற பேருண்மையை உணர்ந்துள்ள அந்தமனிதர் சர்க்கார் பண உதவி செய்தால் சூத்திரக் கயிறு தன் வசமிருக்க வேண்டுமென்று எண்ணுவது தவறு என்று ஏன் கண்டிக்கக்கூடாது? இதைச் சரிசெய்ய சக்தியற்றவர் சத்தியசீலராக நடிப்பது ஏன்?

நிலைமை இப்படி வளர்ந்து கொண்டே போனுல் எப்படி வளரும் சமுதாயம்? மற்ற நாட்டாருக்குள்ள மனவளம் இவர்களுக்கு எவ்வாறு துளிர்விடும்?

### டாக்டர் விசாலாட்சி நெடுஞ்செழியன்

●

டாக்டர் ஆர். விசாலாட்சி நெடுஞ்செழியன் **M.B.B.S. D.M.C.H., M.P.H.** அவர்கள் 10–ம் தேதியன்று இரவு 2-மணிக்கு ஏர் இந்தியா இண்டர் நேஷனல் விமானம் மூலம் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வந்திறங்கினுர்கள்.

டாக்டர் விசாலாட்சி நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்க ஏராளமான நண்பர்கள் விமானக் கூடத்தில் கூடியிருந்தார்கள். மலர் மாலைகளும், ஜரிகை மாலைகளும் பலராலும் அணிவிக்கப்பட்டு, மிக்கக் குதூகலத்துடன் டாக்டர் விசாலாட்சிநெடுஞ்செழியன் வரவேறகப் பட்டார்.

டாக்டர் அவர்களை வரவேற்க; பொதுச் செயலாளர் அண்ணு, இரா. நெடுஞ்செழியன் டபிள்யூ. கே. தேவராசன், எஸ். எஸ். பி. லிங்கம், சி. வி. ராசகோபால், அ. பொன்னம்பலனுர், தா. ஆவுடையப்பன், இரா. செழியன். இரா. இராமதாஸ், குழந்தை வேலன், ஆகியோர் விமான நிலையத்திற்கு வந்திருந்தனர்.

டாக்டர் விசாலாட்சி நெடுஞ்செழியன் அவர்களோடு டாக்டர் ஜானகி சுப்ரமணியம், டாக்டர் பி. ஜி. கேசவலு, இஞ்ஜினீயர் ராஜகோபால் ஆகியோரும் வந்திருந்தனர். இவர்கள் நால்வரும் ட்ரூமன் நான்கு அம்சத்திட்டத்தின் கீழ் அமெரிக்கா அரசாங்கத்தின் செலவில் சென்ற ஓராண்டு காலமாக கல்வி பயின்று பட்டம் பெற்றுத் திரும்பியவராவார்கள்.

# தலையங்கம்

-ரா-

சென்னை [ 17—9—54 ] வெள்ளி

## "ஆயா" வின் ஆயாசம் !

"நாங்கள் எத்தகைய மகத்தான செயல் புரியப்போகிறோம் பாருங்களேன், மூக்கிலே விரலை வைத்து நாக்கிலே தேன் சொட்ட வாழ்த்தப் போகிறீர்கள் எங்களை. யாராலும் சாதிக்க இயலா சத்காரியத்தை இவர்களன்றோ செய்து முடித்தனர் என்று வானதிரக் கூவிடப் போகிறீர்கள். தெருவிலே பாலாறு ஓடும்—அதன்மீது சர்க்கரை மாரி பொழியும்—வாழைக் கனிகள் பனிக்கட்டி மழைபோல் உதிரும்— இப்படி இன்பம் ததும்பும் பஞ்சாமிர்தமாயிருக்கப் போகிறது நாங்கள் வாங்கித் தரப்போகும் சுதந்திர ராஜ்யம்"

இதுபோலக் கதறினர். தேன்மழையோ—தென்றல் இசையோ—தெவிட்டாத அமுதோ — நம்மைத்தேடிவரும் சுதந்திரம் — என எண்ணி விட்ட தோழர்களும், ரத்தத்தால், நரம்புகளால் — அந்த இன்ப அரசு படைக்க எழுந்து விட்டனர். அந்நியமுடி வீழ்ந்தது. அவர்கள் கூறிய அரசும் துவங்கியது.

ஆண்டுகள் ஒன்றா? இரண்டா? மூன்றா? நான்கா? ஏறத்தாழ ஏழு ஆண்டுகளை எட்டி விட்ட வயது படைத்த சுதந்திரக் குழந்தை—அதோ படுக்கையில் கிடக்கிறது. திடீர்ப்பிணி எதுவும் தாக்கிட வில்லை. கிணற்றிலோ ஆற்றிலோ கால் தவறி வீழ்ந்திட வில்லை. ஆனாலும் சுதந்திரக் குழந்தை படுக்கையிலேதான் கிடக்கிறது. பிறந்தது முதல் இது வரையில் அக்குழந்தை படுக்கையிலேதான் கிடக்கிறது. அழும் —எப்போதாவது சிரிக்கும் — ஆராரோ பாடாமலே தூங்கிவிடும் — மருந்தையே உணவாகச் சாப்பிட்டு வாழ்கிறது அந்தக் குழந்தை. அசையாது — ஆடாது — குப்புற விழாது — மண்டியிடாது — மழலை பேசாது! ஆனால் வயதோ ஏழு ஆகிவிட்டது! எட்டாவது வயதை எண்ணிக் கொட்டாவியும் விடுகிறது.

இப்படி ஒரு குழந்தையை—ஏழுவயது எழில் நிறை செல்வத்தை — வாரி அணைத்து உச்சி மோந்து வளர்த்து வருகிறார்கள் இங்கே!

வேறெங்கே? இந்திய துணைக் கண்டத்தில்தான்!

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் நாலும் கலந்து நடுத்தெருவெல்லாம் ஓடுமென்றீரே; நாலும் ஓடவில்லையே; நாறும் சாக்கடையாக வல்லவா நாடு மாறுகிறது — என்று கேட்கும் போது அவர்கள் சொல்கிற பதில் "**குழந்தையாக இருக்கிற சுதந்திரத்தால் எவ்வளவுதான் சாதிக்க முடியும்?**" என்பது தான்!

இந்தப் பதிலைத்தான் ஏழு ஆண்டுகாலமாக — ஏழைகளின் வேதனைக்குரல் கேட்குமிட மெங்கும் — பல்லவியாக அமைத்துப் பாடி வந்தனர், பாரதமாதாவின் நேரடிப் புதல்வர்கள்.

**"காலுக்கு செருப்புமில்லை**
**கால் வயிற்றுக் கூழுமில்லை**
**வீணுக் குழைத்தோமடா**
**எந்தன் தோழா!"**

என்ற பாடல் ஆவேசத்தோடு, அவர்களது மேடைகளில் ஒலித்த காலம் ஒன்றுண்டு!

"கொக்கு பறக்குதடி பாப்பா!"

என நாடகமேடைகளில் குல்லாயணிந்த நடிகர்கள் கொக்கரித்த காலமும் ஒன்றுண்டு!

இன்றோ? அந்தோ — வேதனை! வேதனை! அன்று நாட்டைச் சுற்றி கொக்காவது பறந்தது!

இன்று ஏழைகளின் பிணத்தைக் கொத்தித் தின்ன கழுகுகளல்லவா பறக்கின்றன!

**'காலுக்கு செருப்புமில்லை"**

என்று பாடிய அதே நண்பன்; இன்று புதிய பல்லவியை அமைத்து கொண்டு, மேடையேறி விட்டான் என்பதை எண்ணித்தான், நாமும் — நாடும் வேதனையில் வீழ்ந்திட நேரிட்டது.

**"குழந்தை சுதந்திரம் ...**
**கொஞ்சம் கொஞ்சமாய்**
**சுகந்தரும்! சுவைதரும்!**

**காலுக்கு செருப்பில்லா தோழனே!**
**கால் வயிற்றுக் கூழில்லா தோழனே!**
**குழந்தை சுதந்திரம்**
**கொஞ்சம், கொஞ்சமாய்**
**சுகந்தரும் — இதந்தரும்!"**

இந்தப் பாட்டை இசைத்துக் கொண்டு, பதவி பீடத்தில் அமர்ந்து விட்ட பாரத புத்திரர்களுக்கு நாம் பல முறை அவர்களின் பழைய கீதத்தை நினைவுறுத்தினோம்! பலன், பூஜ்யமாகி விட்டது மாறாக — மாற்றுக் கட்சியினர் தூற்றிப் பேசுகின்றனர் எனவும் பொய் புனையத் துவங்கினர்.

ஏழை சாகிறான் —
பிள்ளை விற்கிறான் —
தொல்லை அவனைத் தொளைக்கிறது!
பட்டாளம் பட்டாளமாகப் பஞ்சைகள்!
அவர்தம் அனாதைப் பிஞ்சுகள்!
சாலையோரத்திலே — வேலியிடுக்கு களிலே — சவம்! சவம்!
நடுத் தெருவில் பிணம்! நாடாள்வோர் கண்ணெதிரே பிணம்!
மானத்தை விலைகூறி மகனைக்காக்கும் மாதாக்கள் மலிகின்றனர்
ஏழ்மையால் நலிகின்றனர் —
உதவாதினி ஒரு தாமதம் உடனே செயல் படுவீர்!
என உரத்தகுரலில் எச்சரித்தோம்!

ஊராள வந்த உத்தமரோ; ஊமை வேஷம் போட்டு நடித்துக் கொண்டிருந்தனர்.

ஆயிரக்கணக்கிலே திட்டங்கள் உண்டு! அவதிபோக்க ஐந்தாண்டுத் திட்டம் தயார்! அப்படி ஒரு திட்டம்! இப்படி ஒரு திட்டம்! என்றெல்லாம் ஏழு ஆண்டுகளாக "வெளிச்சம்" போடப் படுகிறதே தவிர; வேதனை எரிமலைகளை அடக்கிட, விழியிலே கிளம்பும் வெள்ளத்திற்கு அணை போட்டிட அரசுக்கோடி ஏந்தியவர்கள் தயாராயில்லை!

"சிறப்பான திட்டங்கள்! சிந்தித்து வைத்திருக்கிறோம்!" சொன்னார்கள்.

"சிந்தித்துப் பயனில்லை; ஐயன்மீர்! செயலில் காட்டுங்கள் — சிந்தனை என்பதற்குப் பொருளையே மாற்றுகிறீர்களே! வீடு தீப்பற்றிக் கொண்டபோது, இனி தீப்பற்றாமல் இருக்க என்ன செய்யலாம் என்று சிந்திக்கிற "சிந்தனை" இருக்கிறதே; அது தேவையற்றது! பைத்தியக்காரனின் வேலை! முதலில் தீயை அணைத்து விட்டுப் பிறகு தீ தடுக்கும் அற்புதத்தை சிந்தித்துக் கண்டுபிடியுங்கள்!" என்று நாம் சொன்னோம்; பலமுறை சொன்னோம். பல்லாயிரவர் சார்பாகச் சொன்னோம். கேட்காதது மட்டுமல்ல; கேலியும் செய்தார்கள். "கேளிக்கை மத்தியிலே ஏன் புகுந்தீர்" என்று சர்வாதிகாரிகள் வாடிக்கையாகக் காட்டும் சிறைச் சாலையையும் காட்டினார்கள். கொடுமைகளை அனுபவித்தோம். கூண்டைத் திறக்கவும், மூடவுமே வேலை சரியாக இருந்தது அவர்களுக்கு! ஏழுவயது சுதந்திரக் குழந்தை! அதைக் குறைகூறுதீர் எனக் கண்டித்தனர் — இதோ—அந்தக் குழந்தையின் "**ஆயா**" புதுடெல்லியிலே பேசியிருக்கிறார்கள்? என்ன — என்பதைக் கேளுங்கள்!

தென் கிழக்கு ஆசிய நாடுகளில் சுற்றுப் பயணத்தை முடித்து விட்டு திரும்பியிருக்கும், — நேருவின் சகோதரி — ஐ. நா. தலைவி — இலங்கை புகழ் **விஜயலட்சுமி அம்மையார்** அவர்கள், புதுடில்லியிலே பேசியுள்ளவற்றை ஆட்சியாளரும், ஆட்சிக்கு துணை நிற்போரும் சிந்தித்துப் பார்த்திட வேண்டுகிறோம்.

நாம் சொன்னபோது கோபப் பட்டவர்கள், அம்மையார் வாசகம் கேட்டு என்ன சொல்கிறார்கள் என்று பார்ப்போம்!

"கிழக்கேயுள்ள நாம் பேரார்வத்தோடு சிந்திக்கிறோம் — ஆனால் செயல் படுவதில்லை. கிழக்கத்தியப் பகுதி[illegible]களைப் பொருத்த வரை. (சீனாவைத்தவிர) இதர நாடுகள், சிந்தி[illegible]ப்பதில் முன்னேறி இருக்கிற அளவுக்கு, சிந்தித்ததைச் செயல்[illegible]ாக மாற்றுவதில் தேர்ச்சி பெறாத, அல்லது, முன்வராத [illegible] நாடுகளாகவேதான் இருக்கின்றன."

அருமை சுதந்திரக் குழந்தையி[illegible] "ஆயா" வீசிய வாசகத்தை திரும்பத் திரும்பப் படியுங்கள்!

"இந்தத் திராவிடத்தார[illegible]க்கு நம்மைக் குறைகூறுவதே வேலை" என்று பழி கூறியவர்[illegible] ஏற்றதொரு பதிலாக அம்மையாரின் வாசகம் அமைந்[illegible] இல்லையா? என்பதை யோசியுங்கள்!

# முடியரசு தர்பார்! குடியரசுத் திரை!

அன்புள்ள குமார்,

சென்ற வாரத்திய எனது கடிதத்திற்கு நீ பதில் எழுது முன்பாகவே அடுத்த கடிதத்தை உனக்கு எழுத நேர்ந்தது. நீ இன்பக்கனவு கண்டாயல்லவா வெள்ளையர்கள் வெளியேற வேண்டும்; சுயாட்சி ஏற்பட வேண்டுமென்று. அந்த சுயாட்சி காலத்தில் நடைபெறும் பேயாட்டங்கள்தான் குமார், உனக்கு என்னை அடிக்கடி கடிதங்கள் எழுதத் தூண்டுகின்றன. நல்லது தான்செய்ய மனமில்லை--செய்யத் தெரியவில்லையென்றால்—வழி காட்டுகிறவர்களையும் வகையோடு வளர்க்கத் தெரியவில்லையென்றால் இந்த ஆட்சியைப் பற்றி என்ன நினைப்பது? வேகத்தோடு எழுதுகிறேன் என்று வருத்தப்படாதே! வேதனைப்பட்டு, அதை வெளியில் சொல்ல இயலாமல் அந்த ஆவேசச்சொற்பொழிவை எழுத்து வடிவாக்கி உனக்கு அனுப்பி இருக்கிறேன், குமார். பெயரளவிலே குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுத்து வைத்துக் கொண்டு, 'பொருளில் பற்றற்றவர்' என்று கடந்த கால நிகழ்ச்சிகளை மட்டும் எடுத்துக் காட்டி, மற்ற அரசியல் அதிகாரம், அதைத் தொடரும் செல்வாக்கு அனைத்தையும் பிரதம மந்திரியிடம் ஒப்படைத்துவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு நாடு இந்த உலகத்தில் இருக்குமானால் அது இந்த இந்திய உபகண்டம்தான் — வேறில்லை! 'வேதனையோடு வெளியேறுகிறேன்' என்று விலகல் கடிதங்களை முன்வைக்கும் மந்திரிகளுக்கெல்லாம் 'வருத்தத்தோடு உமது ராஜிநாமா கடிதத்தை ஏற்றுக் கொள்கிறேன்' என்று இந்தியாவை தனது பூர்வீகச் சொத்தாக எண்ணிக்கொண்டு கூறும் அரசியல் தலைவர்களை இதுகாறும் நான் எந்த நாட்டு வரலாறுகளிலும் படித்ததில்லை—என்ன குமார், என்னைக் குமே இல்லாத புதிய பாணியில் வாசகங்களை எழுதியிருக்கிறேனே என்று ஆச்சரியப்படுவாய். நீ ஆச்சரியப்படுகிறாய், அல்லது ஆத்திரப்படுகிறாயா என்பது பற்றி அல்ல எனக்குக் கவலை, குறிக்கோள், எல்லாம் ஆட்சியின் போக்கை நீ உணர்கிறாயா? அதன் (!) மாட்சியை நீ விளங்குக் கொண்டாயா என்பதுதான்.

வி. வி. கிரியைப்பற்றி உனக்குத் தெரியும் — கேள்விப்பட்டிருப்பாய் — ஆளைப்பார்த்திருக்க முடியாது. தொழிலாளர் தோழன் அவர். பாட்டாளி வர்க்கத்தின் துயரத்தில் பெரும்பங்கேற்று அவர்களின் கோரிக்கையை கொலு மண்டபத்தில் ஒலிக்கச் செய்த ஏழைகளின் முன்னோடி. இரண்டாண்டு காலமாக அவர் டில்லி மூலஸ்தானத்தில் தொழிலாளர் மந்திரியாகப் பணியாற்றிவிட்டு சென்ற வாரம் டில்லிக்கு ஒருவணக்கம் போட்டுவிட்டு சென்னை சேர்ந்ததை பத்திரிகைகள் உனக்குச்சொல்லியிருக்கும். கிரி ஏன் விலகினார்? அவர் விலகித்தானாக வேண்டுமென்கிற சூழ்நிலை எப்படி உண்டாயிற்று? இதெல்லாம் உனக்குத் தெரியாது. தெரிந்திருக்க வழியில்லை. தினமணி, சுதேசமித்திரன் கலயங்கம் கிட்டிவிட்டால் அதுதான் தீர்ப்பு, என்று எண்ணிப் பழகியவனாயிற்றே நீ, உனக்கெப்படி அரசியல் உள் விவகாரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை பிறக்கப் போகிறது! இருப்பைப் பூவின் தித்திப்பில் திருப்தி கண்டவனுக்கு அஸ்டகிராம் சர்க்கரையைப் பற்றி நினைப்பு வருவது தூர்லாபம் தான்! நண்பனே கிரி விலகினார், ஆனால் கிறுகிறுத்துச் சாயும்படி இந்த சர்க்காருக்கு நல்லதோர் கசையடி கொடுத்துவிட்டுத்தான் விலகியிருக்கிறார். அப்பேர்ப்பட்டசவால் கடிதத்தை நேரு இதுநாள் வரை கண்டிருக்கமாட்டார். அது போன்ற நெஞ்சுரம் இன்றைய காங்கிரஸ் மகாசபையில்கிரியைத் தவிர வேறு யாரிடமுமில்லை யென்றே துணிந்து கூறுவேன். கிரியின் ராஜிநாமாக் கடிதம், தொழிலாளர் மீது காங்கிரஸ் ஆட்சி வைத்துள்ள கருணையை படம்பிடித்துக் காட்டிவிட்டது.

1950-ல் சென் அவார்டினால் அளிக்கப்பட்ட பாங்க் தீர்ப்பு, முதலாளிகளைப் பாதிக்கும் என்று தீர்ப்புக் கூறப்பட்ட அந்த ஆண்டிலேயே எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது உனக்கு தெரியுமோ, தெரியாதோ நானறியேன். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. இந்த நான்காண்டு காலத்தில் முதலாளிகள் கூக்குரலிட்டது போல பாங்கிகள் அப்படி யொன்றும் பாதிக்கப்படவில்லை என்பதை கிரி விளக்கிக் காட்டியிருக்கிறார். என்றாலும் அதை மாற்றக் கோரி பெருந் தலைகள் உருண்டு தொழிற் கோட்டின் தீர்ப்புக்கு காத்துக் கிடந்தனர். கவனமாகக் கேள். தொழிற் கோர்ட்டின் தீர்ப்புக்கு விடப்பட்டு விட்டால் அந்தக் கோர்ட் சொல்லும் தீர்ப்பை ஏற்றுக் கொள்வது தானே முறை? நாணயமான சர்க்காராக இருந்தால் அப்படித் தானே செய்யும். இந்த மக்கள்(!) சர்க்கார் அதையும் ஏற்றுக் கொள்ளவில்லை நண்பனே! கிரி இடித்துக் காட்டுகிறார் பார்;

"தொழிற் கோர்ட் தீர்ப்புகள் அரசாங்கத்தின் நிர்வாக நடவடிக்கைகள் மூலம் குலைக்கப்பட்டால் சமரச ஏற்பாடுகளும், கட்டாயமத்தியஸ்தம் செய்யும் டிரிப்யூனல்களும் ஈடு செய்ய முடியாத நிலையில் பாதிக்கப்பட்டு சிதைவுறும் பாங்கித் தீர்ப்பில் முக்கியமான மாறுதல்களை செய்வது பற்றி நாம் இறுதியான முடிவுக்கு வந்ததின் மூலம் கோர்ட் தீர்ப்புகளுக்குள்ள புனிதத் தன்மையை போக்கியவர்களாகிறோம்."

குமார், நீயே யோசித்துப் பார், ஒரு பெரிய அரசு, அதுவும் அடிக்கடி சத்தியத்தை துணைக்கழைக்கும் சாத்வீக புருடர்களை அங்கங்களாகப் பெற்றிருக்கும் குடியரசு, தன்னாலேயே நிறுவப் பட்டிருக்கும் கோர்ட்டின் தீர்ப்பை நிறுத்தி வைப்பதென்றால், இது ஒப்புக் கொள்ளக் கூடியதா? அந்நிய நாட்டார் பார்த்தால் என்ன நினைப்பார்கள்! புண்ணிய பாரதத்தில் இப்படி ஒரு புதுக் குழப்பமா என்று கேலி பேச மாட்டார்களா? தீர்ப்பைத்தான் நிறுத்தினார்கள், அதன் பிறகு அவை சரியா, தப்பா, என்று பரிசீலிக்க ஒரு குழுவையாவது நியமியுங்கள் என்று சொன்னாரே கிரி, அதைக் கூடச் செய்யவில்லையே! அவர்சொன்னவைகளை ஏற்றுக் கொள்வதில்லை என்ற சூழ்நிலை உருவாகிவிட்ட பிறகு ஏன்தான் அவர் பதவியிலிருக்க வேண்டும்? நீ கேட்பாயே அடிக்கடி, வட நாடு தென்னாடு என ஏன்பிரிக்கவேண்டும் என்று. இப்போது விளங்கிக் கொண்டாயா? வட நாட்டில் அவர்கள் பார்ப்பனர்களாகஇருந்தாலும் தென்னாட்டான் என்றால் எட்டிக் காய்தான் நண்பனே, அதை மறந்து விடாதே! கிரி ஆந்திரப் பார்ப்பனர், அதுவும் நினைவிலிருக்கட்டும். நீ என்ன நினைக்கிறாய்? டில்லி மூலவிக்ரகத்திற்கு சமநோக்கிருந்தால் கிரியின் ராஜிநாமா கடிதத்தை ஏற்றுக் கொண்டவர், தேஷ்முக் விலகப் போவதாக வாயால் சொன்னதற்கே அவர் இல்லம் சென்று கெஞ்சிக் கேட்டுக் கொள்வானேன் விலகாதீர் என்று?

நேர்மையாளர், நீதியின் குன்றம் என்று போற்றிப்பாராட்டப் படுகிறநேருகிரியின் கடிதத்திற்கு சரியான பதிலாவது தந்திருக்கிறாரா? அதுவுமில்லை. அவர்கூட நீதி மன்றத்தின் தீர்ப்பை அலட்சியப் படுத்துகிறார்; அல்லது. தொழிலாளர் வாழ்வு பற்றி அவருக்கு அக்கறையில்லையென்று தானே நாம் நினைக்க வேண்டியிருக்கிறது. கிரியின் தந்தை ஒரு காலத்தில் நீதிக் கட்சிப் பிரமுகர் பொப்பிலி இளவரசரிடம் திவானாக இருந்தவராயிற்றே அதற்காக நான் பரிந்து பேசுகிறேனென்று எண்ணி விடாதே! சீரும் சிறப்புமாக வாழவசதி பெற்ற கிரி வுன் மந்திரி பதவியை உதறித்தள்ள வேண்டும் என்பதை சிந்தித்துப் பார், அல்லது, நீதிக் கட்சியின் பணியில் பங்கு பெற்றவர்களின் புதல்வர்கள் எந்தக் கட்சியிலிருந்தாலும் நீதியின் சாயல் அவர்களின் செயல்களில் படிந்திருக்கும் என்பதை ஆமோதித்துக்கொள். என்ன சொல்கிறாய் இப்போது! உனதுமடலை எதிர்பார்க்கிறேன்.

அன்புள்ள

**பொன்முடி**

## பொன்முடியின் கடிதம்

## அடுத்த ஒலியில்

24-ம் தேதி 'முரசொலி' இதழில் "மூக்காஜி" எழுதும் "சக்கரவர்த்தியின் திருமகன்" இடம் பெறும்.

# ஜீவனும்சம்

**இரா. இளம்வழுதி, M.A., B.L.,**

அன்புள்ள நீலாவுக்கு,

வசந்தா எழுதியது; வணக்கம். நலம். நலமறிய அவா. நீண்ட நாள் கடிதம் எழுதாமைக்கு மன்னிக்கவும். ஏனெனில், என் கணவர் மேல் நான் தொடுத்திருந்த ஜீவனும்ச வழக்குத்தான் காரணம்.

உனக்கும்தான் தெரிந்திருக்குமே, எங்கள் குடும்ப நிலை. என் கணவரோ முன்கோபி, தகப்பனுரே முரட்டுப் பிடிவாதம் உள்ளவர்— முன்கோபத்துக்கும் முரட்டுப் பிடிவாதத்துக்கும் இடையில் அகப்பட்ட நான் இன்று துயரத்தின் எல்லைக்கே தள்ளப்பட்டுவிட்டேன். எனக்குத் திருமணமாகி 2 ஆண்டுகளாகியும் குழந்தையொன்றும் பிறக்கவில்லை என்ற கவலை அவருக்கும், எனக்கு மட்டும் இல்லையா என்ன? ஆகையால் தினசரி, வீடு, போர்க்களமாக மாறிக் கொண்டே இருக்கும். காரணமில்லாமலே அவர் என் மீது காய்ந்து விழுவார். பணிவிடையில் பழுது சொல்ல முடியாது அவரால். ஆனாலும், கோபத்தை எப்படியாவது கொட்டியே தீருவார். இது நடைமுறை பழக்கமாகிவிட்டது.

∴ ∴ ∴

எனக்கு நடந்த திருமணமே ஒரு புரட்சியாயிருந்தது. உனக்குத் தெரிந்திருக்க ஞாயமில்லை. புரட்சியென்றுல் பழைய சம்பிரதாயத்தை விட்டுவிட்டு சீர்திருத்த திருமணம் நடந்ததா என்றுல் இல்லைதான். நான் சொல்லும் புரட்சி எங்கள் வீட்டுப் புரட்சி. அண்ணனே எனக்குச் சுயமரியாதை திருமணம் தான் செய்ய வேண்டுமென சொன்னுர். சீர்திருத்த முறையே சிறந்த முறை என்றும் வாதிட்டார். வீட்டில் பெரும் புயல். ஜாதி, ஆசாரம், குலதர்மம் சம்பிரதாயம் இவை அத்தனைக்கும் வக்கீலானுர் என் தந்தை. அண்ணனும் ஆவேசமாகப் பேசினுர். "எவனே ஒருவன் எழுதி வைத்த சாஸ்திரத்துக்கு, அதுவும் அறிவுக்குச் சம்பந்தமில்லாத சம்பிரதாயத்துக்கு, ஆரிய நாகரிகச் சின்னங்களான வேத, புராண இதிகாசங்களுக்கு மக்கள் பேசாத பாஷையான சமஸ்கிருதப் பெருமைக்கு நாம் ஏன் அடிமையாக வேண்டும்— சரித்திரம் சான்று பேசும் திராவிட நாகரிகம் இப்படியா சீரழிய வேண்டும்! அதுவும் இந்த மறுமலர்ச்சிக் காலத்தில் நான் ஒருக்காலும் என் தங்கைக்குப் புரோகித திருமணத்தை நடத்த ஒத்துக் கொள்ள மாட்டேன்" என்று அண்ணன் அருமையான சொற்பொழிவே நிகழ்த்திவிட்டார். எனக்கும் அண்ணு சொல்வது சரியெனவே பட்டது.

ஆனல், என் தந்தையே கடைசியில்வென்றுர். அண்ணன் வாயை அடக்க அருமையான ஆயுதத்தைப் பிரயோகித்து விட்டார். அப்போதுதான் பத்திரிகைகளில் பரபரப்பான செய்தியொன்று வெளிவந்திருந்தது. சுயமரியாதைக் கல்யாணம் செல்லாது என்று சென்னை உயர்நீதி மன்றம் ஏதோ ஒரு வழக்கில் தீர்ப்பளித்திருந்தது. அதைப் பத்திரிகைகளில்பிரமாதப்படுத்தியிருந்தனர். அப்பாவுக்கோ அந்தச் செய்தி, சிந்தை குளிர்விக்கும் செய்தி. அதைக் காட்டி அண்ணனை மடக்கினுர். மடக்கினது மட்டுமல்ல சீர்திருத்த திருமணங்களையே கேலி பேசினுர்—சுயமரியாதை திருமணம் செய்து கொண்ட பெண்களுக்கு உரிமையே இல்லை; அவர்கள் சட்டப்படி மனைவிகளல்ல; வைப்பாட்டிகளுக்குச் சமானம் என்றும் விளக்கம் கொடுத்து வேடிக்கை பேசினுர். இவ்வளவும் பேசிய என் அப்பா, என்னிடம் ஒரு வார்த்தை கேட்க வேண்டுமே, கிடையாது. என்னுடைய சம்மதம் தெரியாமலேயே, என் மணவிழாவுக்கு வேண்டிய ஆபத்தங்களைக் கவனிக்க ஆரம்பித்தார், என் செய்வது! நம் நாட்டில் என்ன படிப்புள்ள குடும்பமானுலும், கல்யாணவிஷயங்களில், கன்னிப் பெண்கள் கையில்ஊமையர் தானே! நானும் அதற்கு விலக்கல்லவே. அண்ணன் மட்டும் அடிக்கடி என்னைப் பார்த்து, வசந்தா, உன் கல்யாணத்திற்கு முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணுயிரம் ரிஷிகளும்;கின்னரர், கிம்புருடர், சித்தவித்யாதரர், நாரதர், அஷ்டதிக்குப் பாலகர்கள், ஆகாசவாணி, பூமாதேவி ஆகிய அனைவரும் ஆசிர்வதிக்கப் போகிறுர்கள்; உனக்கென்னம்மா குறை என்று கேலி பேசுவார்.

எனக்கும் என் கணவருக்கும் பிரபல ஜோஸ்யர்கள் நாள் நட்சத்திரம் பார்த்துக் கொடுத்த முகூர்த்தத்தில் வேத ஒலிகள் முழங்க ஜாம், ஜாமென கல்யாணம் நடந்தேறியது. என் கழுத்தில் தாலியும் ஏறியது. அண்ணனைக் குத்திக் காட்டவோ என்னவோ, புரோகிதமுறையில் உள்ள அத்தனை சடங்குகளையும் ஒரு இம்மி பிசகாமல் நடத்திக் காட்டினுர்என் தந்தைதானங்களை ஏராளமாக் கொடுத்தார், நானும் என் கணவர் வீட்டிற்குச் சீரும் சிறப்புமாக சென்றேன். சிறந்த வாழ்க்கை நடத்த துடித்தது என் உள்ளம். ஆனல், அவரின் கோபத்தின் முன் என் லட்சியம் எந்த மூலைக்கு?

∴ ∴ ∴

காசி, ராமேஸ்வரம் போய்ப் பார்க்கலாம்; பிள்ளைவரம் கேட்கலாம் என்று அடிக்கடி அவர் சொல்லிக் கொண்டே இருப்பார். நான்குறுக்கே ஏதாவது சொல்லி விட்டாலோ கொதித்தெழுந்து கூத்தாடுவார், இந்த நிலையில் ஒருநாள் என் தந்தை எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார். வழக்கம்போல், என்கணவர் தன் கோபத்தைக் காட்டத் தவறவில்லை. குழம்பில் உப்பு இல்லை என்று, சோறுபரிமாறிக் கொண்டிருந்த என் முகத்தில் சோற்றை விசிபடித்தார். இத்தனைக்கும் சமைபல்காரிதான் அங்கே சமைப்பது. இந்தக் கண்கொள்ளாக் காட்சியை கண்ட என் தகப்பனுர் பதறி விட்டார். கோபம் அவருக்கும் அளவு கடந்துவிட்டது. அதிகம் வளர்த்துவானேன். அன்றே நான் என் தகப்பனுரோடு ஊருக்குப் புறப்பட்டு வந்துவிட்டேன். பிடிவாதமாக என்கணரும் என்னைத் திரும்பிக்கூட பார்க்கவில்லை. அப்பாவுக்குத் தெரியாமல் நானும் பலகடிதங்கள் அவருக்கு எழுதினேன், பலன், பூஜ்யந்தான். இதற்கிடையில், என் கணவருக்கு வேறு கல்யாணம் நடத்த பேச்சுவார்த்தை நடப்பதாகக் கேள்விப் பட்டோம். ஆத்திரப் படுவதைத் தவிர அப்பாவால் வேறு என்ன செய்ய முடியும்! என் கணவர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம் என்றும் கூறினுர். ஆனல் பெண்ணுள்ளத்தையோஅவர் சரியாகப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. சில உறவின் முறையார் மூலம் சமாதானத்துக்கு ஏற்பாடு செய்ய அப்பாவை வேண்டினேன். அண்ணனைக் கெஞ்சினேன். சமாதான தூதும் என் கணவரிடம் பலிக்கவில்லை. நான் அவருடைய மனைவியே இல்லை என்று எப்படித்தான் மனதை இரும்பாக்கிக் கொண்டு சொன்னுரோ தெரியவில்லை. கல்யாணமே நடக்கவில்லை; கோர்ட்டுக்கு வேண்டுமானுல் போய்ப் பாருங்கள் என்று குதித்தாராம். சாஸ்திரோக்தமாக, இந்துமத ஆச்சாரப்படி, குலதர்மம் வழுவாமல் அக்னி சாட்சியாக என் கை பிடித்த அவருக்கு நான் மனைவியில்லையாம். இதைவிட பேரிடி என்ன வேண்டும் எனக்கு! கடைசியில் அப்பாவே முன்நின்று ஜீவனும்ச வழக்கு ஏற்பாடு செய்தார். நானும் ஜீவனில்லாமல் யந்திரம்போல் ஒத்துக் கொண்டேன். நாங்கள் பிரபல வக்கீலை அமர்த்தினேம்;

∴ ∴ ∴

கோர்ட்டில் அன்று ஏகப்பட்ட கூட்டம். சாஸ்திர முறைப்படி கட்டிய மனைவியானுலும் நான் ஜீவனும்சம் கோர எங்களுக்குள் நடந்த கல்யாணத்தை, அவர் மறுப்பதால், பூரணமாக நிரூபிக்கவேண்டுமாம். ஊரறிந்த உண்மையானுலும், உற்றுர் உறவினர் ஒத்துக் கொண்டாலும், நிரூபணம் இல்லை யென்றுல் கோர்ட் ஒத்துக் கொள்ளாதாம். அதற்காக கல்யாணத்தை நடத்திவைத்த புரோகிதன், நாயணம் வாசித்த மேளக்காரர்கள், கோவில் குருக்கள் ஊர்ப்பெரிய மனிதர்கள் அனைவரும் வந்து சாட்சியம் சொல்ல வேண்டுமாம், என் கல்யாணம்அவர் ஊரில் நடந்ததால், மேற்கண்டவர்களெல்லாம், என் கணவருக்கு அடக்கமாயிருந்தார்கள்.என் தந்தையும் எவ்வளவோ முயற்சித்துப் பார்த்தார், பணத்தைத் தண்ணீராக்கினுர்; ஓடினதைத் தவிர உருவான பலன் எதுவும் இல்லை. புரோகிதனே, கோயில் குருக்களோ சாட்சி சொல்ல மறுத்துவிட்டார்கள். இந்தப் பூலோகவாசிகளே, கோர்ட்டுக்கு வர மறுத்துவிட்டார்களென்றுல் தேவலோக வாசிகளுக்கு எங்கே நேரமிருக்கப் போகிறது, எந்த விதமான ரிக்கார்டும்கிடையாது. முக்கிய பங்கெடுத்து முன் நின்று கல்யாணத்தை நடத்தி வைத்த பெரிய மனிதர்களும் சாட்சியம் சொல்ல முன்வரவில்லை. எங்கள் பக்கம் வாதிட்ட வக்கீலோ, கொஞ்சம் கொஞ்சமாக புன்சிரிப்பைக் குறைத்துக் கொண்டார். அவருடைய ஆரம்பகால ஆர்வம் வழக்கு வளர வளர துவண்டுகொண்டே வந்தது. கடைசியில், கல்யாணத்தை நிரூபிக்க வேண்டிய சாட்சிகளை நீங்கள் சரியாக கொண்டு வரவில்லையே நான் என்ன செய்வேன், எதிர்தரப்பார் வாதத்தை முறியடிக்க முடியவில்லையேநான் என்ன செய்வேன் என்று முகாரியில் கொண்டு வந்து முடித்

[ 8-ம் பக்கம் ]

## விரைவில் !

★

'நகைச் சுவை மன்னர்கள்'(சார்லி சாப்லீன் -என். எஸ். கே.) என்ற தலைப்பில் நீண்ட கட்டுரை 'முரசொலி' யில் விரைவில் வெளி வர இருக்கிறது.

## மோகினிப்பிசாசு!

## 5



**பொ**ழுது இன்னும் சரியாக விடிந்து விடவில்லை; தெளிவற்று இருந்தது உலகம், புராணீகர் உள்ளம் போல!

சரியாக விடிந்து வெளிச்சம் பரவுவதற்குள் வீட்டுக்குப் போய்விட வேண்டும் என்ற துடிதுடிப்பில் பரிமளம் நடந்து கொண்டிருந்தாள். யாராவது தன்னை அந்த நிலையில் பார்த்துவிடப் போகிறார்கள் என்ற அச்சம், அவள் கண்களில் மின்னிக் கொண்டிருந்தது. மேலங்கிக்குப் பதிலாக ஒரு துண்டைப் போர்த்திக் கொண்டுவரும் அவளைப்பற்றி யார்தான் சந்தேகப்படமாட்டார்கள். அவளது கால்கள் கல், முள் என்றுகூடப் பாராமல் வீடு நோக்கிப் பறந்து கொண்டிருந்தன. நன்றாகப் பொழுது விடிவதற்கும் அவள் தன் வீட்டுக்குள் நுழைவதற்கும் சரியாக இருந்தது.

நடுத்தரமான ஓட்டுவில்லை வீடு. பல இடங்களில் ஓடுகள் பிரிந்துபோய் பழுதுபார்க்கப் படாமலே இருந்தது. மூங்கி முள்ளால் ஆன வேலிகள் அமைத்த கொல்லை அந்த வீட்டிற்கு அழகுதந்து கிராமீய மெருகைப் பூரணமாக அளித்தது. கொல்லையின் கடைசியிலே உயர்ந்த வைக்கோற் போர். அதைத் தொடர்ந்து சிறுசிறு மிளகாய்ப் பாத்திகள்-கொத்தமல்லி தெளித்திருந்த காரணத்தால் கொல்லை முழுதும் 'கம்' என்ற வாசனை எழுந்து கொண்டிருந்தது. மல்லிகை முல்லைக்கொடிகள், கொம்புகளிலே பின்னிக் கொண்டு கிடந்தன, வீட்டை ஒட்டினாற்போல மாட்டுத் தொழுவம்.



செவலைப்பசு ஒன்றும், ஒரு நோஞ்சான் கன்றுக் குட்டியும் அந்தத் தொழுவத்திலே யிருந்தன. அதிலிருந்து, பரிமளாவின் வீட்டில் பால் வியாபாரம் செய்கிறார்கள் என்று புரிந்தது.

பரிமளா, மெதுவாக நடந்து வந்து, மாட்டுத் தொழுவத்திலே புகுந்தாள். அப்போதுதான், கரந்தது போகமீதமிருந்த பாலை கன்றுக்குத் தந்துவிட்டு நின்ற செவலைப்பசு, பரிமளாவை ஆவலோடு பார்த்து "அம்மா?" என்று கதறியது. பரிமளாவுக்கு தூக்கி வாரிப் போட்டது. செவலைப் பசுகத்தும் போது எத்தனையோ முறை அவள் அதைத் தடவிக் கொடுத்து அன்பு காட்டியிருக்கிறாள். அதன் கன்றுக்காக, தன் பெற்றோர்களிடம் வாதாடியிருக்கிறாள், பால் நிறையவிட வேண்டுமென்று!

ஆனால் இப்போது அவளால் பசுவையோ, கன்றையோ கவனிக்க இயலவில்லை. ஏதோ ஒரு பீதி அவளை ஆட்டிப் படைத்தது. இரவு முழுதும் பீதிக்கிடையே காதலனோடு இருந்தபோதும் — அப்போது அதுபற்றி கவலை தெரியவில்லை அவளுக்கு. அப்போது அவளால் அந்த பயத்தை சுமக்க முடியவில்லை. பெற்றோர்கள் ராத்திரியெல்லாம் தன்னை தேடியிருப்பார்களே, அவர்களிடம் என்ன சமாதானம் கூறி தப்புவது—எதைச் சொன்னால்நம்புவார்கள்-துரை சொன்னது போலவே சொல்லிவிடலாமா? நம்புவார்களா? — ஒருவேளை நம்பிவிட்டால்? இப்படியெல்லாம் குழப்பிக்கொண்டாள். மாட்டுத் தொழுவத்திலிருந்தபடியே வாயிற்புரத்தை எட்டிப் பார்த்தாள். அவள் உடம்பு அவளையறியாமலே குலுங்கியது. அவள் தகப்பனார் தாண்டவன், வாயிற்புறத்திலே வந்து நின்றார். அவரது முகம் இரவெல்லாம் கண் விழித்தது போல சோம்பிப் போயிருந்தது. எங்கெங்கே போய்த் தன்னைத் தேடினாரோ என்று தனக்குத் தானே எண்ணிக் கொண்டு, பரிமளம் கண் கலங்கினாள், தாண்டவன் மெதுவாக நடந்து சென்று வீட்டுக் கெதிரேயுள்ள வேப்ப மரத்தில் குச்சி ஒடித்துக் கொண்டு பல்துலக்கியவாறு அதைவிட்டு நகர்ந்தார்.

"எங்க போறீங்க?" என்று ஒருகுரல் வேதனை கலந்து ஒலித்தது. தாண்டவன் திரும்பினார்.

பரிமளாவின் தாயின் குரல் அது.

"போம்போதே கேட்கிறீயா? வாழ்ந்தாப் புலதான்! போறது தெரியலே — பல்லு விளக்கத்தான் போறேன்?"

"சரிதான் — காலங்காத்தால உங்க காரியம் சரியா நடந்துட வேண்டியது-அவ்வளவுதான்! என் பெத்தவயிறு பத்தி எரியுது; அதைப்பத்தி உங்களுக்கென்ன கவலை!"

"ஏண்டி பெத்தவயிறு பத் எரியுது? கொஞ்சம் குளிச்சிய பழையது சாப்பிட்டு, நீராக ரத்தைக் குடியேண்டி!"

"அப்ப, என் பெண்ணு போனது, போனது தானா?"

"ஏதுடி எழவு! ஜோஸ்ய காரனை கேக்ராப்பல என்ன கேக்கிறே? நானுந்தான் ராத் ரியே புடிச்சு, அலையாத எ மெல்லாம் அலையிறேன் — அஞ்சலை! போயி வேலையை பாரு! இதா பல்லு விளக்கிட் வந்துடறேன் — பழையத் பினஞ்சு வையி! வயிற்றுக் கொஞ்சம் போட்டு கிட்டா தான் வாடி வளைஞ்சு பொண்ணைதேட முடியும்!"

சொல்லிக் கொண்டே தாண்டவன் அதைவிட் அகன்றார். நாட்டுப் புறத்தி அசல் பதிப்புதான் தாண்ட னின் உருவம். அவருக் கொஞ்சமும் குறைந்தவளல் அஞ்சலை. அவர்கள் இருவரு கும் பிறந்த பரிமளா — நாக கத்தின் சிகரத்திலே நின் நர்த்தனம் புரியாவிட்டாலு பட்டிக் காட்டுப் பெ என்று கூற முடியாத அளவு குப் படிப்பறிவு வாய்ந்தவ

தந்தை வீட்டைவிட் அகன்றதும், பரிமளத்திற் ஒரு சிறு துணிச்சல் ஏற்ப டது. அவர் வருவதற்கு தாயாரிடம் ஓடிப்போ அவளை சமாதானம் செய் விட்டால், பிறகு அம்மா யும் துணைக்கு வைத்து கொண்டு, அப்பாவி கோபத்தை தணித்து விடல என்ற நம்பிக்கை அவள் உ ளத்திலே ஒளி விடத்துவ கியது.

மாட்டுத் தொழுவத்திலிரு படியே, நகர்ந்து, கொல்லை பக்கமாக வந்து, முள்வேலியி படலைத்திறந்துகொண்டு வீ டுக்குள் நுழைந்துவிட்டா பரிமளம்,

உள்ளே நுழைந்த பரிமள தாய் அஞ்சலை எங்கேயென் தேடினாள். அஞ்சலை, கன் தில் கைவைத்தபடியே ஒ மூலையில் உட்கார்ந்திருந்தா அவள் அருகேபோய். 'அம் என்று பரிமளம் கூப்பிட்டா அவ்வளவுதான். இருவரும் காலத்தில் ஒருவரையொரு கட்டித் தழுவிக் கொ டார்

பிள்ளைகள் எந்தவிதமான றுசெய்துவிட்டுவெளியேறி ருந்தாலும்—அவர்கள்திரும்பி நம்போது அந்தத் தவறுகள் றைந்து போய், காணுமற் பான செல்வத்தைக் கண்டே ா என்கிற ஆனந்தமும், ச உணர்ச்சியும்—தாய் நத்திக்குத்தான் ஏற்படும்— ன்பதை அஞ்சலை-பரிமளம் மூவல் காட்சி உணர்த்தியது.

"என் கண்ணு-எங்கம்மா ாய்விட்டாய்! பெத்த வயிற் லே பால் வார்த்தவளே! ன்பத்தரை மாற்றுத்தங்கமே! ன் கண்ணுட்டி! ஏண்டி ன்னை இப்படி தவிக்க ட்டே!" ஒப்பாரிவைக்கவே ரம்பித்துவிட்டாள் அஞ்சலை. மளாவும் தாய்ப் பாசத்தின் லை மீறிய உணர்ச்சிக்கு டிமைப்பட்டு அஞ்சலையின் டியிலே தலையைக் கவிழ்த்த று அழ ஆரம்பித்து விட் ள்.

"எங்கே போனம்மா? சொல் ம்மா! உங்க அப்பா— ளத்ரகாரமா இருக்காரு! க்க வைக்கக் கூடாதுன்னு ப்பவே சொன்னேனே ட்டியான்னு என்னைப் பாட்டு ராத்திரி கொன்னுட் ரும்மா!"

பரிமளம், தடுமாறித் தடுமாறி ா காதலன் சொல்லிக் காடுத்த பொய்க் கதையை ம்மாவிடம்கூற ஆரம்பித் ள்.

"அம்மா! என்மேல் ஒரு றமும் இல்லம்மா! நான் ங்கிக் கொண்டிருந்தேனே; ப்போது யாரோ வந்து ன்னை எழுப்பினது மாதிரி வு கண்டேன்:- கண்ணை பித்துப் பார்த்தேன்-ஆனால் மைகளைத் திறக்க முடிய லை. யாரோ என்னைத் க்கிக் கொண்டு போனது திரி இருந்தது: அவ்வளவு ன்; எனக்கு ஒரே மயக்க ய் இருந்தது-பிறகு எங்கே ா ஒரு இடத்தில் என்னை ்கார வைத்து, என்னைச் றி ஒரு அழகான பெண் று கொண்டு சிறிது நேரம் த்தாள்—பிறகு பாடினாள்! யாணம்—கல்யாணம்— ன்று கத்தினாள்-அதன் பிறகு வள் ஆட ஆரம்பித்தாள்— ருமையான நடனம்-ஆடி த்ததும், கல்யாணம்—கல் ணம் என்றுகூச்சலிட்டாள்! ப்யோ, கடலிலே தள்ளு ர்களே — என்று பயங் மாகக் கூவினாள். திடீ ன அவள் மறைந்து விட் ள், விழித்துப் பார்த்தேன். ாழுது விடியும் வேளை. ஒரு கு அடியில் நான் படுத்தி தேன், என்னுடைய லங்கியை காணும். அதற் பதிலாக இந்தத் துண்டு ந்தது, எதுவுமே புரியாமல் ந்துபோய், எங்கேயோ ழுது கொண்டு ஓடினேன். லவேளையாக என்னை அறி மலேயே நம் வீட்டுக்கே ந்து விட்டேன், இது தானம்மா நடந்தது" என்று பரிமளம் கூறினாள். அவள் கண்களில் நீர் துளிர்த்தது. ஏமாற்றும் தந்திரத்தைக் கையாளும் பெண்கள் விடுவார்களே; நீலிக்கண்ணீர் — அந்தக் கண்ணீர் அல்லஅது! பொய் சொல்லித்தாயை ஏமாற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டதே என்பதற்காக வருந்தி உதிர்த்த நீர்த்துளிகள் அவை கள்! தானும் தன் காதல் துரையும், கூடிவாழ்ந்திட முடியாமல், தடுக்கப் போகும் முட்டுக் கட்டைகளை இந்தக் கண்ணீரால் கரைத்துவிட முடியுமா? என்ற கலக்கம் பரிமளாவின் நெஞ்சத்தை ரம்பம் போட்டு அறுத்தது. அப்படி அறுபடும் இருதயத்திலேயிருந்து பீறிடும் ரத்தத் துளிகளே, அவளது அழகுக் கண்களில் எட்டிப்பார்த்து, கன்னத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டு ஓடின என்று கூறலாம்.

துரையும் தானும் காதலர்கள்; இருவரும் சந்திக்க ஏற்பாடு செய்யப் பட்ட இடத்திலே சந்தித்தோம்; நாங்கள் வாழ்வுப் பாதையிலே கை கோர்த்து நடை போட ஆசைப் படுகிறோம், என்று துணிந்துகூற முடியாத அந்தத் தோகை மயிலாள், பெற்றோரின் கோபத்திலிருந்து தப்புவதற்கு காதலன் கூறிய கற்பனைக் கதையைத் தன் கண்ணீரோடு குழைத்துத்தந்தாள் தாயிடம்!

காட்டாமணி செடிகளின் அசைவிலே, காட்டேரியையும், ஒதியமரத்துக் கிளையின் மீது பேச்சி, பேய்களையும், கண்டதாக கதைகட்டும் வட்டாரத்திலே வாழ்ந்திடும் அஞ்சலை, தன் மகளின் கதையை அப்படியே நம்பிவிட்டாள். நம்பியது மட்டுமல்ல அந்தக் கதைக்குப் பூரணத்துவமும் அளித்தாள்.

"அடி என் கண்ணு! உன்னை அழைச்சிகிட்டுப் போனது யாருன்னு நான் தெரிஞ்சுகிட்டேன்— அந்தப்பத்தரு மகள் தான்!"

"யாரும்மா? எந்தப் பத்தரு மகள்?"

"அதான்—கொல்லர் வீட்டுப் பெண்ணு! — உனக்குத்தான் சொல்லியிருக்கேனே கண்ணு! கல்யாணத்துக்குன்னு போயி, கடல்ல கவிழ்த்து விட்டாங்களே; அந்தப் பெண்ணுதான்!"

"இருக்கும்மா — இருக்கும்! அந்தப் பெண் கழுத்திலேகூட மாலை இருந்தது!"

"அதேதான்! அந்தப் பெண்ணு, கன்னி கழியாமல் செத்ததினாலே, மோகினிப் பிசாசா சுத்திகிட்டு இருக்குதாம்! அதுதான் உன்னைத் தூக்கிகிட்டுப் போயி, விளையாடியிருக்கு!"

"ஏம்மா—அந்தக் கொல்லர் வீட்டுப் பெண்ணு, செத்துப் போயி, எத்தனையோ நூறு வருஷம் ஆயிற்று என்கிறீர்களே; நான் பார்த்த பெண்ணு இளமை மாறாமல் இருந்ததே!"

"இருக்கும் — இருக்கும். அப்படித்தான் இருக்கும். சாகிற வரையிலேதான் மனுஷாளுக்கு வயசு ஏறி ஏறி, கிழமாப் போவாங்க — செத்து விட்டா, அப்பறம், செத்தப்ப என்ன வயசு இருந்ததோ; அந்த வயசு தான் இருக்கும்."

பரிமளாத்திற்கு சிரிப்பு வேறு வந்து விட்டது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள். அஞ்சலையால் அதை கவனிக்க முடியவில்லை, மகள் திரும்பி வந்த மகிழ்ச்சியில் இருந்தாள் அவள்.

"எப்படியோ அம்மா! கொல்லர் வீட்டு மோகினிப்பெண்ணு உன்னை எனக்கு திருப்பிக் கொடுத்தது! யார் செஞ்ச புண்யமோ; என் வயிறு குளிர்ந்தது—"

என்று அஞ்சலை, தன் மகளின் நெளி பாய்ந்த கூந்தலை வருடினாள். அப்போது, தாண்டவன் "அஞ்சலை" என்று கூப்பிட்டபடியே உள்ளே வந்தார்.

"கேட்டீங்களா நல்ல சேதி! நம்ப கண்ணுவந்துட்டுது – இதோ பாருங்க!" என்று அஞ்சலை சந்தோஷத்தில் கத்தினாள்.

தாண்டவன், தன் மகளை ஏற இறங்கப் பார்த்தார். அப்பா, ஆத்திரத்தில் ஏதோ செய்துவிடப் போகிறார் என்று மட்டும் பரிமளா புரிந்து கொண்டாள்.

"நீங்க ஒண்ணும், மீசையை முறுக்காதிங்க! பரிமளத்தை மோகினி பெண்ணு தூக்கிட்டுப் போயி."

அஞ்சலை வாய்மூடவில்லை. அதற்குள் தாண்டவன் ஆத்திரமாக, அவளை ஓங்கி அறைந்து கீழே தள்ளிவிட்டு, "சீ, பேசாதே நாயே! பெண்ணு வளர்க்கிற லக்ஷணம் நல்லா இருக்கு! மோகினியாம்— ராகினியாம்!" என்று கூச்சல் போட்டார் தாண்டவன்.

"அப்பா!" என்று கூவி, ஏதோ சொல்ல முயன்றாள் பரிமளா!

"பேசாதே! அப்பாவாவது- ஆட்டுக் குட்டியாவது! உன்னை துண்டு துண்டா வெட்டி போடுறேன் இரு! — மானங்கெட்ட கழுதை!"

என்று கூறியபடி தாவிப் பாய்ந்து, ஒரு பெரிய அரிவாளைக் கையிலே தூக்கிக் கொண்டார் தாண்டவன். பரிமளா, தந்தையின் சுபாவம் அறிந்தவள். ஆகவே, தன் வாழ்வு முடிந்து விட்டது என்பதை புரிந்து கொண்டாள்.

"அப்பா!" என்று அலறினாள்! தாண்டவன் பேசவில்லை;

அரிவாளை ஓங்கியபடி மகள் மீது பாய்ந்தார். அதற்குள் "டேய் நில்லு!" என்ற சப்தம் கேட்டு தாண்டவன் திரும்பினார் — பரிமளா மீது விழ இருந்த அரிவாளை ஒருகை தடுத்தது.

[ வளரும் ]

[புதையல் தொடர் கதையில் வரும், கருத்துக்களையோ, சம்பவங்களையோ, யார் களவாடிக் கையாண்டாலும் அவர்கள்மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும்.] (ஆ—ர்)



# சிறந்தது எது?

★

வீரர்களில் சிறந்தவன்யார்? என்ருல், சொந்த
மனைவிதனைப் பறிகொடுத்துப் பிறகு மீட்ட,
ஆரியரின் பேரரசன் இராமன் என்பர்.
அவனல்ல, ராவணன்தான் வீரன்என்பேன்.
தேரெடுத்து, வாளெடுத்துப் படையெ டுத்துச்
சாகடித்துத் திரும்பிவந்த நம் கலிங்கப்
போரிருக்க; பாரதப்போர் தன்னைப் பற்றிப்
புகழ்வோனைப் புல்லனென்பேன். பேய னென்பேன்!

மலைகளுக்குள் சிறந்ததெது? இதுபோல் கேட்டால்,
மேருஎன்பர். பொதிகைஎன்பேன். இமயம் போன்ற
தலைஉயரம் தென்மலைக்கு உண்டோ? என்ருல்,
தென்றல்தனை மேருமலை தருமோ? என்பேன்.
நிலந்தடவி, ஊர் தடவி, நிலவை நோக்கும்
நிர்வாணக் கடல்தடவும் கங்கை ஆறு;
தலைபோன்ற தென்ருல்; அத் தலையின் கண்கள்
தென்னுட்டின் காவிரிதான் என்று சொல்வேன்.

இலைதனிலே சிறந்ததெது? என்று கேட்டால்,
எருதேறும் சிவபெருமான் பக்தர்; வில்வ
இலைஎனபர். வைணவத்தை வளர்ப்போ ரெல்லாம்
இல்லை இல்லை துளசிதான் சிறந்த தென்பர்.
சிலைவணக்கம் செய்தவனை மறுத்து, பொங்கல்
திருநாளைக் கொண்டாடி வந்த சோழன்
மலைமார்பில் அசைந்திட்ட ஆத்தி மாலை,
வைத்திருந்த பச்சிலையே சிறந்த தென்பேன்.

உடைதனிலே உயர்ந்ததெது? என்று, நாட்டில்
உள்ளவரை நாம்கேட்டால்; காதல் செய்யும்
துடியிடையாள் உடுத்திவரும் சேலை தன்னைச்
சிறந்ததென்பர் மயக்கத்தில்! நானே; சோறு
வடித்ததொரு பானையைப்போல் தலை குனிந்து,
வாடுகின்ற ஏழைதனைப் பார்த்து; 'இந்தா
உடுத்துஇதை' எனக்கொடுக்கும் கிழிந்த கந்தல்,
ஒளிவீசும் பட்டைவிட உயர்ந்த தென்பேன்.

நாட்களிலே சிறந்ததெது? என்று கேட்டால்,
ஞாயிறென்பர். திங்களென்பர்; நம்மை எல்லாம்
ஆட்டிவைக்கும் எம்பெருமான்; தூது சென்ற
அந்நாளே புனிதமென்பர் புராணப் பித்தர்.
வாட்களினுல் புண்பட்டு; மார்பை நோக்கி
வருகின்ற வேலுக்கு வரவுதந்து,
நாட்டுக்கு உயிர்தன்னைத் தந்தான் என்னும்
நற்சேதி கேட்கும்நாள் சிறந்த தென்பேன்.

சுவைகளிலே சிறந்ததெது? இந்தக் கேள்வி
சிலர்காதில் விழுந்தவுடன்; விரகத் தாலே
தவிக்கின்ற தருணத்தில், தையல் வந்து
தருகின்ற முத்தமென்பர். தமிழ்தான் என்பேன்.
சிவனென்ற பார்ப்பானும், வெண்ணை தன்னைத்
திருடியுண்ட திருமாலும்; தெய்வம் என்று
கவிஎழுதிக் கடவுள்நெறி தனைக் கெடுத்த,
கம்பர்களை; கலைஞர்களைத் துரோகி என்பேன்.

கவிஞர் சுரதா

# புரியும்படி சொல்லுங்கள்! புரோகிதர்கள் யார்?

★

*அவர் சூது, வாதற்றவர்; எதை எங்கே பேசுவ தென்றே அவருக்குத் தெரியாது; வாயிலே வந்ததை யெல்லாம் கொட்டிவிடுவார்; என்றுதான் சென்னை கவர்னர் பிரகாசாவைப் பற்றி இது நாள்வரை நம்மில் பலர் எண்ணி வந்திருக்கிறோம். ஆனால் அவர் சாமான்யரல்லர் என்பதை அன்னாரின் சமீபகால சொற்பொழிவுகள் மெய்ப்பித்து வருகின்றன. அண்மையிலே சென்னையில் ஓரிடத்தில், பண்பாட்டையும், நாகரீகத்தையும் பற்றி விளக்கிப் பேசியிருக்கிறார். "உணவையும், உடையையும் அந்தந்த நாட்டின், சீதோஷ்ண ஸ்திதிக்கு ஏற்றவாறு ஏற்றுக் கொள்கிறார்கள்"— இது அவர் பேச்சின் ஒரு சாரம். ஆடை வேறுபாட்டை, 'அது அந்தந்த நாட்டின் கால நிலைக்கு ஏற்றாற்போல' என்று சொன்ன சீமான்—ராஜபவனத்துக் கோமான் புரோகிதர்கள் ஆடை அணியும் முறை பற்றிக் கூறும்போது, அவர்கள் படித்தவர்கள்; அவர்களைக் குறை சொல்லக் கூடாது என்று சொல்லியிருக்கிறார். குறை சொல்லக் கூடாதாம்! இங்கே மட்டும் 'குறை சொல்லக் கூடாது' என்று ஏன் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளவேண்டும்? 'அந்தந்த நாட்டு காலநிலை' என்று சொல்ல ஏன் அவருக்கு நா எழவில்லை—காரணம், புரோகிதர் களாகிய பார்ப்பனர்கள் வேறு நாட்டிலிருந்து தென்னுட்டில் குடியேறியவர்கள் என்று அவர் வாயால் எப்படிச் சொல்லுவார்! அதற்காகத்தான் புரோகிதர்கள் படித்தவர்கள் அவர்களைக் குறை கூறக்கூடாது என்கிறார் போலும்! களங்கமில்லாத உள்ளத்தினராக இருந்திருந்தால், புரோகிதர்கள் வேறு நாட்டிலிருந்து வந்தவர்கள் — அதனுல்தான் அவர்கள் வேறுமுறையாக ஆடை அணிகிறார்கள்" என்று புரியும்படி சொல்லியிருக்க லாமல்லவா! சொல்லமாட்டார் — எப்படிச் சொல்லுவார் அவர்!*

## ஜீவனும்சம்...

[ 5-ம் பக்க தொடர்ச்சி ]

தார். முடிவு என்ன? ஜீவனும்ச வழக்கு தள்ளப்பட்டது. சுயமரியாதை கல்யாணங்கள் செல்லாதென உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்திருப்பது உலகறிந்த உண்மை; ஆனுல், வேத சாஸ்திர சம்பிரதாயப்படி செய்யப்பட்ட கல்யாணமும் வழக்கு மன்றத்தில் திக்குமுக்காடி விட்டது கண்டு என் அப்பாவுக்கோ ஆத்திரமும் அவமானமும்! எனக்கோ ஜீவனும்சம் கிடைக்காததுபெரியதாகத் தெரியவில்லை; என்னைக் கல்யாணமே செய்து கொள்ளவில்லையென்று என் கரம்பிடித்த அந்தக் காருண்யமூர்த்தி சத்தியப் பிரமாணத்தின் மீது சொன்னது தான் என்னைக் கொல்லுகிறது; வழக்கு மன்றமும் அந்த உண்மை சொரூபியின் பக்கம் நின்றது என்னை சோகபிம்பமாக்கியது. என் செய்வது! விசித்ர உலகில் உலவிடும் நாம், வீணர்கள் வகுத்த பாதையில் தான் போக வேண்டும் போலும்!

அடி நீலா, எனக்கு உள்ளபடியே வெறுப்பும் கோபமும் வந்தாலும், கல்யாணம் ஆயிரம் காலத்துப்பயிர், பிரமன் எழுதிய படி போட்ட முடிச்சு, சிறிதும் பிசகில்லாமல் குறித்துக் கொடுக்கப்பட்ட நாள் நட்சத்திரம்—எல்லாம் இப்படியாஆகவேண்டும் என்ற எரிச்சல்தான் எனக்கு! ஜீவனும்சமே இந்தக் கதியானுல், ஆடவர்கள்இரண்டாங்கல்யாணம் செய்து கொண்டாலும் நம்மால் எப்படித் தட்டிக் கேட்க முடியும்? கோர்ட்டுகள் தான் என்ன செய்ய முடியும்! "பெண்கள் சமுதாயத்தின் கண்கள்"—இது எழுத்துக்கு எழுத்து உண்மை என்று பேசும் உத்தமர்களும் இல்லாமலில்லை. ஆனுல்கல்யாணம் போன்ற காரியங்களில் பெண்களுக்கு இருக்கும் இவ்வளவு தொல்லைகளை முடிவுகட்ட வழி வகுக்க வேண்டாமா? பதிவு முறை கட்டாய சட்டமாக்கப்பட வேண்டாமா? எனக்கும் கொஞ்சம் கொஞ்சமாக நிம்மதி ஏற்பட ஆரம்பித்துள்ளது. அதனுல்தான் என் உள்ளத்தைக் கொட்டி இவ்வளவு எழுத நேர்ந்தது.

அண்ணவைப் பார்க்கவே அப்பா கூசுகிறார். சுயமரியாதைக் கல்யாணங்களிலாவது வாழ்க்கை ஒப்பந்தம் படிக்கிறார்கள்; பதிவில்லாத பத்திரம் தயாரிக்கிறார்கள்; அதுகூட கோர்ட்டில் எவ்வளவோ பயன்படுமே என்று அப்பா அடிக்கடி அங்கலாய்த்துக் கொள்கிறார். கோர்ட்டேறி குட்டுப்பட்டவரல்லவா! நானும் விரைவில் ஆசிரியப் பயிற்சிக்குப் போகிறேன். பிறகு என் வாழ்க்கை சுதந்தர வாழ்க்கை தான். விரிவான மடல் பின்னர் எழுதுகிறேன். பதில் போடு.

உன் அன்புள்ள,

**வசந்தா.**




# சிவப்புக்கல் மோதிரம்

★

## சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

நீங்களெல்லாம் புத்திசாலிகள்; நல்ல தம்பிகள்! இதை எங்கள் அலுவலகத்தில் குவியும் உங்கள் எழுத்துக்களே சொல்லுகின்றன. அப்பப்பா! கதைகள்; கவிதைகள்; கேள்விகள்; இன்னும் என்னென்னவோ!

கதைகளைப்படித்தேன். கோட்டியூர் தங்கை பிரகதாவின் கதை ஒன்று நன்றாக இருந்தது. உங்களுக்கும் சொல்ல ஆசை. கீழே இருக்கிறது; படியுங்கள்.

ஃ ஃ ஃ

"தம்பீ!...தம்பீ!..."

"....................."

"தம்பீ! உன்னைத்தான்; கூப்பிடுவது காதில் விழவில்லையா?"

சிவப்புக்கல் மோதிரம் இப்படிக் கூப்பிட்டது. பக்கத்தில் கிடந்த வெள்ளைக்கல் மோதிரம் விழித்துக் கொண்டது. கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தது. மூடிக் கிடந்த அந்தப் பெட்டிக்குள் அவ்வளவு வெளிச்சமில்லை.

"என்ன அண்ணே? ஏன் கூப்பிடுகிறாய்?"-இப்படிக் கேட்டது வெள்ளைக்கல் மோதிரம்.

"தம்பீ! சும்மா கூப்பிடவில்லை. காரணமாகத்தான். பூமியின் அடியில் கிடக்கும் தங்கத்தைப்போல நாம் இருவரும் இந்த பெட்டிக்குள்ளேயே கிடக்கிறோமே, ஏன் தெரியுமா?"

"நானே நினைத்துக் கொண்டிருந்தேன், கேட்க வேண்டுமென்று; ஏன்? எதற்காக? சொல்லேன், கேட்கலாம்"

"என்னால் வந்த வினைதான் தம்பீ, இது; காரணம் கதை போல் இருக்குமே..."

"கதையா? கதை என்றால் எனக்கு சுவை அண்ணே! சொல் சீக்கிரம்"

வெள்ளைக்கல் மோதிரம் அவசரப் படுத்தியது. சிவப்புக்கல் மோதிரம் சொல்லியது.

"தம்பீ! நான் இந்த உலகில் பிறந்தது தாண்டவப் பத்தரின் வீட்டில். நான் முதன் முதலாக குடி புகுந்த இடமோ இந்த வீட்டுத் தம்பி ரவியின் கையில். ரவிதான் என்னை முதலில் வாங்கினான். தனது இடது கை மோதிர விரலிலும் மாட்டிக் கொண்டான். அவனுக்கு கொள்ளை மகிழ்ச்சி! என்னைப் பற்றி-என் அழகைப் பற்றி பொன்னியிடம் அவன் கதை கதையாகச் சொல்லுவான். பொன்னி யாரென்று சொல்லவில்லையே; அவள் ரவியின் வீட்டு வேலைக்காரப் பெண். இயந்திரம் போல் வேலை செய்வாள். ரொம்ப ரொம்ப நல்லவள். ரவிக்கு அவள் மேல் நிறைய அன்பு...ஆனால் தம்பீ, அந்த அன்பு என்னால் பாழாகி விட்டது...கேள் கதையை.

நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன. ஒரு முறை ரவி ஜுரத்தில் படுத்தான்; குணமானான். ஆனால், கொஞ்சம் இளைத்து விட்டான். அதன் விளைவாக நான் அவனது விரலில் அவ்வளவு பிடிப்பாக நிற்க முடியவில்லை.

ஒரு நாள் ரவி குளித்துக் கொண்டிருந்தான். 'சோப்'பால் விரல்களை பலமுறை தேய்த்தான். நான் நழுவிக் கொண்டே வந்தேன். கீழே விழுந்து விடுவேனோ?—எனக்கு இந்தப் பயம்; புதுப் பயம். கடைசியில் ரவி தலையில் தண்ணீர் ஊற்றிக் கொண்டான். அப்போது...தம்பீ...நான் பயந்தது நடந்தே விட்டது. கீழே விழுந்தேன் அதோடு மட்டுமல்ல; உருண்டு கொண்டே போனேன். சுவரின் ஓரத்திற்கு வந்தேன். எதிரே பார்த்தேன். ஒரு எறும்புப் பொந்து! நான் "ஐயோ" என்று அலறினேன். அதற்குள் பொந்துக் குள்ளும் விழுந்தேன். என் உடல் நடுங்கியது. நான் இந்தக் குகைக் குள்ளேயே கிடக்க வேண்டியது தானா? நான் அழுதேன்; கத்தினேன்; பலன்......?

பலன் பாவமாகி விட்டது தம்பீ! குளித்த பிறகு ரவி என்னைத் தேடினான். குளிப்பதற்கு முன் மேஜையில் கழற்றி வைத்ததாக அவனுக்கு ஞாபகம். தேடித் தேடி அலுத்தான்.

கடைசியில் பொன்னியின் நினைவு வந்துவிட்டது. "அவள் தானே என் மோதிரத்தை உற்று உற்றுப் பார்ப்பாள்; அந்தத் திருட்டுக் கழுதைதான் ...என்ன செய்கிறேன் பார், அவளை"—இப்படி திடீரென்று எண்ணியது ரவியின் பாழும் மனம். அப்புறமென்ன? பொன்னி அழைக்கப் பட்டாள். விசாரிக்கப் பட்டாள். குழிக்குள் கிடக்கும் என்னைப் பற்றி அவளைக் கேட்டால்? பொன்னி 'பார்க்கவில்லை' என்றாள். நம்பவில்லை ரவியும், அவன் அம்மாவும். பொன்னி கெஞ்சினாள். ரவி திட்டினான்; 'திருடி' என்றான். பொன்னி அழுதாள். ஆனால், ஐயோ, தம்பீ! அந்தப்பாவி ரவி அவளை அடித்தான்; வெளியே விரட்டினான்.

பொன்னி அழுதாள். நடந்தாள். ரவியின் முட்டாள்தனம் அவளைத் திருடியாக்கி விட்டதே!—எனக்கும் அழுகைதான் வந்தது. ஆனால் பொன்னிக்கு வேலையும் போய்விட்டது.

சில நாட்கள் சென்றன. கடைசியில் நான் அந்தக் குகையை விட்டு வெளியேறும் நாளும் வந்தது.

ஒருநாள் எறும்புகள் உணவு எடுத்துச் செல்லும் அழகை 'ஆராய்ச்சி' செய்து கொண்டிருந்தான் ரவி. என் குகை வாயி

(10-ம் பக்கம்)

## சிறிய வயதிலே

# பால 'பயில்வான்'!

முன்னிருட்டு—பனிக் காலம்—ஒரே குளிர்! அந்தப் பையனுக்கு வீட்டிற்குள்ளேயே இருப்பது பிடிக்கவில்லை; வெளியே வந்தான்; கொஞ்ச தூரத்திலிருந்த காடு அவனுக்கு ஞாபகம் வந்தது; காட்டை நோக்கி நடந்தான்.

காட்டை அடைந்தான். அவனுக்கு ஒரே மகிழ்ச்சி. பெரிய பெரிய மரங்கள்; சிறிய சிறிய குன்றுகள்; நிறைய நிறைய மலர்கள்—இவைகளை எல்லாம் பார்த்தபடி காட்டைச் சுற்றிக் கொண்டிருந்தான்.

திடீரென்று தூரத்தில் ஏதோ ஒரு கரிய உருவத்தைக் கண்டான்; உடனே அதை நோக்கி ஓடினான்; அது ஒரு கரடி! கரிய காட்டுக் கரடி! பையனைக் கண்ட கரடி உறுமியது. உடலை சிலிர்த்தது. அவன்மேல் பாய்ந்தது. தம்பியும் தயாரானான் சண்டைக்கு! மறுகணம் அந்த மிருகத்துக்கும் மிருதுவான சிறுவனுக்கும் போர் மூண்டுவிட்டது.

சண்டை நடந்தது. சிறுவன் சோர்ந்து போனான்; அவன் கால்கள் தடுமாறின; கைகள் களைத்தன; உடல் தள்ளாடியது; கீழே சாய்ந்தான். கரடியும் கோரமாக ஒரு முறை உறுமியது; அவன்மேல் பாய்ந்தது!

அதே சமயம் 'டுமீல்' என்றொரு வெடிசப்தம் கேட்டது. அந்தத் துப்பாக்கி சப்தத்தைக் கேட்ட கரடி சிறுவனை விட்டு விட்டது; பாய்ந்தோடி மறைந்தது.

சிறுவன் கண்விழித்தான். கரடியைத் தேடினான். காணவில்லை. எதிரில் சில மனிதர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் "தம்பி! என்ன காரியம் செய்தாய்? காட்டில் தனியாக வரலாமா? நான் வெடி சப்தம் எழுப்பியிரா விட்டால், நீ இன்னேரம் பிணமாகியிருப்பாயே!" என்றார்.

உடனே அச்சிறுவன் "ஐயையோ!" என்று பயந்து அலறவில்லை. "நான் சண்டைபோட பயப்படவில்லையே! அந்தக் கரடியைக் கொன்று, அதன் தோலை என் அம்மாவுக்கு எடுத்துச் செல்ல அல்லவா விரும்பினேன்!" என்றான். மனிதர்கள் விழித்தார்கள்.

பன்னிரண்டு வயதிலேயே கரடியோடு சண்டை போட்ட அந்தப் பையன் யார் தெரியுமா? அவன்தான் இரண்டாவது உலக யுத்தத்தில் நெப்போலியனைத் தோற்கடித்த வீரன் — மாபெரும் கடற் தளபதி — நெல்சன்!

## பெரிய மனிதர்கள்

## குறளோவியம்: கருத்துக்கடிதம்

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

பொன் மலர் மணம் பெற்று விளங்குவதுபோல, திருவிட மக்களின் உணர்ச்சியைத் தட்டியெழுப்பும் உன்னதப் பொன்னேடாம் "முரசொலி"க்குச் சிறப்புச் செய்வது போல் "குறளோவியம்" என்னும் பகுதி அமைந்திருந்தது.

சென்னைப் பல்கலைக் கழகத்தார் செய்துவரும் பெருங் குறையை முரசொலி நிவர்த்தி செய்து வருகிறது. பல்கலைக் கழகத்தார் காமத்துப்பால் பகுதியைச் சேர்ப்பதில்லை. உண்மையில் அதன் விளைவாகத்தான் பெரும்பாலான மாணவர்கள் இல்வாழ்க்கையின் இன்பத்தைப் பற்றியும், வாழ்க்கைத் துணைவியருடன் நடத்த வேண்டிய நெறியான காதல் வாழ்க்கையைப் பற்றியும் சரியாகத் தெரிந்து கொள்ள முடிவதில்லை; அதன் காரணமாக மாணவத் தோழர்கள் சிலபல சமயங்களில் வாழ்வில் வழுக்கி விழவும் நேரிடுகிறது.

சொல்லழகும் பொருளழகும் நிரம்பப் பெற்றுப் புது மெருகுடன் வந்து கொண்டிருக்கும் "குறளோவியம்" தொடர்ந்து வரவேண்டுமென்று மாணவ நண்பர்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

[ தியாகராசர் கல்லூரி ] வே. தங்கப்பாண்டியன்

மதுரை.
12—9—54

## பிறைவானம்...

[ 9-ம் பக்க தொடர்ச்சி ]

விழும் அவன் கண்கள் நடமாடின. பளபளக்கும் என்னையும் பார்த்துவிட்டன.

என்னைக் கண்டதும் அவன் கொண்ட அவசரமும்;...... துடிதுடிப்பும்! அப்பப்பா! குச்சி ஒன்றின் துணையால் என்னை வெளியே எடுத்தான்.

"என் மோதிரம்! என் மோதிரம்!" என்று கத்தினான். அவனுக்கு ஒரே மகிழ்ச்சி! ஆனால்... திடீரென்று அவன் முகம் மாறியது. பொன்னி! அவள் நினைவு வந்துவிட்டது அவனுக்கு! "ஐயோ, பொன்னி! நீ நல்லவள்; நீ திருடியல்ல! நான் முட்டாள்! உன்னை அடித்தேனே; விரட்டினேனே!"—என்று புலம்பினான். உடனே திடீரென்று வீட்டை விட்டு வெளியே வந்தான். தெருவில் இறங்கினான். ஓடினான்; பொன்னியின் குட்டைக் குடிசையை நோக்கி ஓடினான். குடிசையை நெருங்கினான். வேகமாகக் கதவைத் திறந்தான். 'பொன்னி' என்று கத்தினான். ஆனால்?...உள்ளே பொன்னியில்லை. யாருமேயில்லை. அந்தப் பழைய குடிசை பாழடைந்து கிடந்தது.

ரவி வெளியேவந்தான். தெருவில் மாடு ஓட்டிக் கொண்டு போய்க் கொண்டிருந்தான் ஒரு தம்பி. அவனை அழைத்தான். "ஏன் தம்பீ! இந்தக் குடிசையில்-இருந்தவங்க-எங்கே?" என்று கேட்டான்.

"அதுவா? தெரியாதா உங்களுக்கு? இங்கே இருந்தபொன்னியோட அப்பா செத்துப் போயிட்டாரு. ரெண்டு நாளைக்கு முன்னே பொன்னியும் எங்கேயோ போயிட்டுது. பாவம்"—இப்படி சொல்லி விட்டுப் போனான் அவன்.

ரவி கையிலிருந்த என்னை உற்றுப் பார்த்தான். அவன் கண்ணீரால் நான் நனைந்தேன். அவன் நடந்தான். வீட்டிற்கும் வந்தான்.

வாசலில் அவனுக்காக தபால்காரன் காத்துக் கொண்டிருந்தான். ஒரு பார்சலையும் தந்துவிட்டுப் போனான். ரவி பட்டணத்து மாமா ஏதாவது அனுப்பியிருப்பார் என்று எண்ணிக்கொண்டே பார்சலைப் பிரித்தான். மேலேயே ஒரு கடிதம் இருந்தது. எடுத்தான். என்ன...? அந்தக் கோணல் எழுத்துக்கள்; எங்கேயோ பார்த்ததைப் போல—இப்படி எண்ணியபடி ரவி படித்தான்.

அன்புள்ள அண்ணா,

'திருடி' என்று விரட்டினீர்களே, அந்த நல்லவள் எழுதுகிறேன். இத்துடன் நான் திருடாத உங்கள் மோதிரம் வருகிறது. 'ஏது?' என்று கேட்க வேண்டாம். மூன்று மாத எனது பாகிபட்டினி மாடுபோல் நான் பட்ட உழைப்பு—அவைதான் இந்த மோதிரம். பெற்றுக் கொள்ளுங்கள். உங்களுக்குக் கோபம் வரலாம். ஆனால் என்னைத் திட்ட முடியாது; அடிக்கவும் முடியாது. ஏன் தெரியுமா? நான் எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறேன்"

—பொன்னி

ரவி கடிதத்தை முடித்தான். "ஐயோ! பொன்னி!" என்று வாய்விட்டுக் கத்தினான். பலன்..? பார்சல் பெட்டிக்குள் கிடந்த உன்னை எடுத்தான். என்னோடு சேர்த்தான். அன்று இந்தப் பெட்டிக்குள் புகுந்தவர்கள் தான் நாம். ரவி நம்மைத் தொடவேயில்லை.

கதை முடிந்தது. வெள்ளைக் கல் மோதிரம் 'அப்படியா?' என்று முணமுணத்தது.

**தலையணையில் எலி ஒன்று பாய்ந்து ஓடியது. நான் திடுக்கிட்டு விழித்தேன். என் எதிரே மோதிரங்களும் இல்லை; பெட்டியும் இல்லை. 'அடடா கனவா?' என்றேன். "ஆமாம்" என்றது கரிய இரவு.**

**—சொர்ணம்**

## காதற் புயல்!

பூக்காமலேயே நறுமணம் எழுப்புவல்ல பூங்காவனம்—ஆமாம், சந்தனக் காடு அது.

பருவட்டம் கட்டி, உருத்திராட்சம் உருட்டும ஒரு வாட்டுத் தலையன் அப்பக்கம் வந்தான். "அங்கையர்க் கண்ணியே! உன்னை ஆண்டவன் அழைக்கிறான். தீப ஆராதனைகளால் துவண்டுபோன அவன் மேனிக்கு இதம் சேர்க்க குழம்புருவ கொள்ள வேண்டுமாம். கோமகளே நீதான்! பாந்தியன் கட்டளை, பணிந்து விடு, பெண்ணே!"

—பக்குவமாகத்தான் பேசினான். சந்தனப்பெண்ணோ சிரிப்பு காட்டி ஓடிவிட்டாள்.

மற்றொரு நாள் — கூர்த்திலும் உளியும் கொண்ட பருத்த உருவம் அந்தப் பருவமங்கையை நாடியது.

"கூடல்நகரின் ஓரத்திலே, இரக்கமற்ற வேடர்கள் உலவும் பூமியிலே உழலும் பெண்ணே! உப்பரிகையே உன்னை அழைக்கிறது; உதைத்துத் தள்ளாதே! கயமலர்க் கண்ணியும், காதற் கொழுநனும் கட்டித் தழுவி சூளுறவு கொள்ளும் படுக்கையாக, உன்னை ஆக்க வந்திருக்கிறேன் — ஒய்யாரப் பைங்கிளிகள் உட்கார்ந்து இசைபாடும் மூங்கில் தோளினளே! வந்துவிடு; பாண்டியன் கட்டளைக்கு பணிந்துவிடு"

மரங்கொல் தச்சனின் மாயப் பேச்சுக்கு அவள் மயங்கி விடவில்லை; மாறாக, பறந்து விட்டாள், அந்தப் பச்சை மேனியாள்!

'சில்' என்ற ஓசை வானவெளியிலே கேட்டது; சந்தனப் பெண்ணின் மேனி தழுவியது. அவளோ ஒருமுறை கூனி நிமிர்ந்திட்டாள்; பறந்துவந்த தென்றலும் அவள் கூந்தலை வருடி நின்றான்.

ஆண்டவன் அனுப்பிய அர்ச்சகனும், பாண்டியன் அனுப்பிய தச்சனும் சற்றே திகைத்து நின்றனர்.

"உருவமில்லாத ஊர்சுற்றியைத் தேடி உருகும் உதவாக்கரையே! ஈரேழு உலகத்தையும் காத்து ரட்சிக்கும் என் காவலனின் வாக்கை அவமதித்து, யாக்கைஇழந்த இவனது சேர்க்கையிலே நீ என்ன சுகம் காணுகிறாய்? உன்னைப் பார்த்துவிடுகிறேன் ஒரு கை" — வெடித்து வந்தன இந்த சொற்கள்!

"இது தான் காதல்; அதற்குக் கண் ஏது?" என்று களிப்பு மிகுதியால் கத்தினாள் அந்தக் காந்தக் கண்ணினாள்!

நெறித்த புருவத்தினராய் நகர்ந்தனர் அவர்கள்!

நாட்கள் சென்றன-பாண்டியன் பணியாட்கள் அந்தக் காட்டிற்கு தீ வைத்தனர்.

தென்றல் வந்தான். தான் தொட்டு விளையாடிய அந்தப் பட்டு மேனி எங்கே, எங்கே என்று தேடி ஓடினான். குளிர் தவழும் சந்தனக் காடே, உன்னை வெந்தணலில் வேக வைத்தது யார், யார் என்று புலம்பி ஓடினான். தென்றலின் அந்தப் புலம்பலைத்தான் இந்தப் பொல்லாத உலகம் புயல் என்றது.

— மாறன்

உருவகச் சித்திரம்

அமோக ஆதரவுடன் விற்பனையாகிறது!

அன்னைத் தமிழகத்தின் அடிமைத் தளையறுக்க,
உரிமை முரசொலித்து உயிர்க் கனல்
மூட்டிய ஒப்பற்ற மாவீரன்

# கட்டபொம்மன்

வீர வரலாறு [ நாடக உருவில் ]

எழுதியவர் : செ. அமலன்

கண்ணைக் கவரும் வண்ண முகப்பு—
கருத்தினிக்கும் கலைப் படைப்பு.

விலை ரூ. 2-8-0

விவரங்களுக்கு:—

ஸ்ரீ வாணி விலாச அச்சகம்

திருப்பாபுலியூர்

# பொது வாழ்வு

## இங்கிலாந்தின் வருங்காலப் பிரதமர்!

உயர்தர வர்க்கத்தினரின் உயிர்காக்கும் ரட்சகனாக மாறிவிடலாம்; ஆனால் மக்களின் தலைவனாக மதிப்பு பெறுவது எளிதான காரியமல்ல. பொதுப்பணி பொறுப்பு வாய்ந்ததோர் பணி. தோளிலே கை போட்டபடி நடப்பர்; பின்னர் தொண்டைக் குழியை நெறிக்கவும் சமயம் பார்த்து நிற்பர். இதற்கிடையிலே, பாய்ந்துவரும் ஈட்டிகளென பகைவர் பாசறை வீசி எறியும் எதிர்ப்புக் கணைகளை — எள்ளி நகையாடலை தாங்கிக் கொள்ளும் பண்பு நலனும் அவசியம்' இப்படி தொல்லைகள் நெளியும் கள்ளிக்காடாம் அரசியல் உலகிலே நீண்டநாட்கள் நெடும் பயணம் நடத்திய பெருமை இங்கிலாந்தின் தொழிற் கட்சிப் பிரமுகர் அனூரின் பெவனுக்கு உண்டு.


அனூரின் பெவான் சுரங்கத் தொழிலாளியாய் இருந்து அவர்களுடைய இன்ப துன்பங்களைப் பிரதிபலிக்கும் பிரதிநிதியாக பாராளுமன்றத்தில் வீற்றிருப்பவர். இங்கிலாந்தின் அரசியல் வட்டாரத்தில் ஒதுக்கி வைக்கமுடியாத ஒரு பெரும் புள்ளி! சர்ச்சிலுக்கு நிகர்த்த நாவன்மையோடு சர்ச்சிலையே தாக்கித் தகர்க்கும் திறன் பெற்றவர். எனவேதான் வேடிக்கையாகச் சொல்கிறார்கள், சர்ச்சிலைப் பயப்படுத்தும் பொருள்கள் இந்த உலகத்தில் இரண்டே இரண்டுதானாம். அவைகளில் ஒன்று, தன்னைக் கிழவனாக்கும் காலதேவன். மற்றொன்றோ அனூரின் பெவான். ஆட்டுமந்தையைப் போல பிரிட்டிஷ் பாராளுமன்றம் போர்க்காலத்தில் சர்ச்சிலின் கொள்கையைக் கண்ணை மூடிக் கொண்டு ஆதரித்தபோது பெவான் மட்டும்தான் அதற்கு மாபெரும் எதிர்ப்பு முன்னணி அமைத்திருந்தார்.

கொண்ட கொள்கையைக் கடைப்பிடிப்பதிலே பெவானை உடும்பிற்குத்தான் சமானமாகச் சொல்லவேண்டும். அவர் சுரங்கத் தொழிலாளிகளின் பிரதிநிதியாக பாராளுமன்றத்துள் நுழைந்தபோது லாயிட் ஜியார்ஜ் பிரதமர். அனுபவம் பெற்ற பிரதிநிதிகள் கூட ஆமையைப்போல் அடங்கி ஒடுங்கிக் கிடக்கும் நேரத்தில் தொழிலாளர் நலனைப் பாதிக்கும் பிரச்சினை ஒன்று வந்தது. அப்போதுதானே முதன் முதலில் பார்லிமெண்டில் நுழைந்திருக்கிறோம்; எப்படிப் பேசுவது, அதுவும் புகழின் பேழையாகக் காட்சி தரும் லாயிட் ஜியார்ஜை எப்படி எதிர்ப்பது என்கிற சந்தேக வினாக்களையெல்லாம் கவனிக்காமல் பெவான் உணர்ச்சி மிக்க சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார். சொந்தக் கட்சிக்காரர்களெல்லாம் வாயடைத்துப் போனார்கள். லாயிட் ஜியார்ஜ் என்ன நினைத்துக் கொள்வாரோ, என்று நடுங்கினார்கள், சிலர்! லாயிட் ஜியார்ஜ் எழுந்தார்; புன்முறுவல் தவழ, "சபையோர்கள் இதுவரை இங்கிலாந்தின் வருங்காலப் பிரதம மந்திரியின் பேச்சைக் கவனித்தார்கள்..." என்று தொடங்கி பெவானைக் கௌரவித்தார்.

பார்லிமெண்டில் பெவானுடைய முதல் ஆலாபனையே எதிர்க்கட்சிக் காரர்களுக்கு வேட்டு வைத்து விட்டது. இப்போதெல்லாம் கோடை இடியென கர்ஜிக்கும் பெவான் சிறு வயதிலே நாக்குக் கோளாறினால் வாயைத் திறக்கவே சங்கோஜப்பட்டார். திக்கு வாயை மாற்றிக் கொண்டு திறன் வாய்ந்த பேச்சாளனாக மாற அவர் அடைந்த இன்னல்கள் சொல்லும் தரமன்று. ஒரேபொருள் கொண்ட பல வார்த்தைகளை உருப்போட்டு வைத்திருப்பாராம். பேசிப் பழகும்போது ஒரு வார்த்தை வெளிவரத் தயங்கினால் உடனே வேறு வாரத்தைக்குத் தாவி, நாக்குளறலைத் தடுத்துக் கொள்வாராம்.

பெவானின் வாழ்க்கை ஏடுகள் ஒவ்வொன்றும் முயற்சி தரும் பயனைத்தான் பறைசாற்றுகின்றன.

பள்ளிப் பையனாக இருக்கும் போதே பெவான் தொழிலாளர் துயர் நீக்க கார்ல் மார்க்ஸ் எழுதி வைத்துப் போன கொள்கைகளைக் கற்றுத் தேர்ந்தார். இப்போதும் கூட சோஷலிஷம்தான் உலகத்திற்கு சுபிட்சம் அளிக்க வல்லது என்னும் கருத்திலே திடமான நம்பிக்கை வைத்திருக்கிறார். பெவானின் பேச்சும், மூச்சும் சமதர்மக் கொள்கைகள் பூத்துக் குலுங்கும் சோலையாகத்தான் இருக்கிறது.



இலட்சியத்தை நிறைவேற்ற சொந்தக் கட்சி தயங்கினால்கூட அதை பாய்ந்து வந்து தாக்குவதற்கு பெவான் தயாராகி விடுவார். எனவேதான் அவர் தொழிற்கட்சியினரால், கட்சிக்குள் கட்சி அமைத்து கலாம் விளைவிப்பதாகக் குற்றம் சாட்டப்படுகிறார். பெவானின் தீவிர வாதக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதற்கு அவரிடம் ஒரு அணிவகுப்பே இருக்கிறது. இந்த இடதுசாரிகளின்தொகை புற்றீசலைப் போல நாளா வட்டத்தில் பெருகி வந்தபோதும், அது தொழிற் கட்சியின் வலிமைதனை கொஞ்சமும் சிதைத்தது கிடையாது. பொருளாதார அமைப்பிலே துரிதமான மாற்றம் காண அரும்பாடுபடும் பெவானை இரண்டுமுறை தொழிற்கட்சிவிலக்கிவைத்தது. பெவான் இல்லாத காரணத்தால் தொழிற்கட்சியின் துடுக்கு மிக்க வாலிபப் பருவமே மறைந்து விட்டதாகத் தோன்றியது. பெவான் இப்போது அசைக்க முடியாத இமயமலையாகிவிட்டார்—சொந்தக் கட்சியின் தலைவரான ஆட்லியும் எதிர்க் கட்சித் தலைவரான சர்ச்சிலும் அவரது நேர்மையான தாக்குதலுக்கு பதில் சொல்ல வேண்டிய நிலையிலிருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

போர் வெறி பிடித்தலையும் அமெரிக்காவின் தலைமையில் சென்றால் உலகமே அழிந்து விடும் என்கிற கருத்து கொண்டவர்தான் பெவான். செஞ்சீனவை ஐ. நா. சபையில் சேர்க்காமலிருப்பது மனிதத் தன்மையை மறந்த செயல் என்பதை அவர் அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறார். அவர் பிரதமராகிவிட்டால், நூற்றாண்டுக் காலமாக இருந்து வரும் அமெரிக்காவின் தொடர்பை இங்கிலாந்து அறுத்துக் கொண்டு, ரஷ்யாவுடன் நெருங்கிய நேசத்துடனோ அல்லது தனக்கென வகுத்துக் கொண்ட நடுநிலைமை கொள்கையுடனோ தான் செல்லும் என்று பலரும் நினைக்கின்றனர்

1930-ம்ஆண்டு தனியாளாக ஒரு தூது கோஷ்டியுடன் ரஷ்யா சென்றிருந்த பெவான் தாய் நாட்டிற்கு காதலர் பெவானாகத் திரும்பிவந்தார். அவரது தூதுக் குழுவிலே அங்கம் வகித்த ஜென்னி லீ என்னும் மாது சிரோன்மணியைக் காதலித்து 1934-ல் மணம் செய்து கொண்டார். அப்போது ஜென்னி லீயும் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார்.

கணவனும் மனைவியும் இப்போது "டிரிபியூன்" என்ற பத்திரிகையை நடத்தி வருகிறார்கள். சொந்தக் கட்சிக்காரர்களுக்குக்கூட பெவான் சிம்ம சொப்பனமாகக் காட்சி அளித்தாலும், அவருடைய இடதுசாரிக் கொள்கையிலிருந்து ஜனநாயகம் இன்னும் கற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினைகள் பல இருப்பதாகவே தோன்றுகிறது.

### கார்க்கி பேசுகிறார்!

★

நாம் சீட்டுக் கட்டைக் கலைத்துப் போடுவதுபோல வாழ்க்கை நம்மைக் கலைத்துப் போடுகிறது. ஏதோ, எப்போதாவது ஒருமுறை சரியான இடத்தில் போய் விழுகிறோம்; அதுவும் கொஞ்ச நேரத்துக்குத்தான். வாழ்க்கை நம்மை மறுபடியும் கலைத்து விடுகிறது.

ஃ ஃ ஃ

சென்ற காலத்தை நினைத்துப் பார்ப்பவர்கள் தற்காலத்திற்கு வேண்டிய சக்தியை இழந்து விடுவதுமல்லாமல் எதிர்கால நம்பிக்கையையும் நாசம் செய்து கொள்ளுகிறார்கள்.

ஃ ஃ ஃ

தைரியமாயிருங்கள்; எல்லாவற்றிறகும் ஒரு முடிவு இருக்கிறது. இதுதான் வாழ்க்கையிலுள்ள முக்கியமான அம்சம். மழை காலத்திற்குப் பின்னால் இளவேனிற் காலமும் வரும்,

ஃ ஃ ஃ

மூளையும் மனச்சாட்சியும் இருந்தால் போதும், பிழைத்துக் கொள்ளலாம்; பணம் தேவையில்லை. பொதுவாக, மனச்சாட்சி உலர்ந்து போயிருக்கும் போதுதான பணம் வருவது வழக்கம். மனச்சாட்சி எவ்வளவு குறைந்திருக்கிறதோ அவ்வளவு பணம் அதிகமாகக் கிடைக்கும்.

ஃ ஃ ஃ

நெருக்கடியான நிலைமை உண்டாகும் போதுதான் மனிதனுக்கு சக்தியும் உண்டாகிறது.

# கடைசிப்பக்கம்

'சிலேக்கா'-ஆரூர்.

(?) சமீபத்தில் அரசாங்கத்தார் பட்டங்கள் வழங்கினார்களே அவையெல்லாம் கௌரவப் பட்டங்கள் அல்ல என்று நேரு மறுத்திருக்கிறார் அல்லவா; அது பற்றி உங்கள் கருத்து என்ன?

*வழக்கம் போல் நேருவின் தெளிவற்ற பேச்சுதான் இதுவும். நேர்மையாக செய்தி வழங்குவதில் பெயர் பெற்ற பி. டி. ஐ. ஸ்தாபனம், பத்ம விபூஷன் பாலவார்க் என்கிற பட்டம் ஆங்கிலேயர் வழங்கிய ஜி. சி. எஸ். ஐ-க்கும், பத்ம விபூஷன் துவ்ராவர்க் கே. சி. எஸ். ஐ-க்கும் பத்ம விபூஷன் திஸ்ரவர்க் சி. எஸ். ஐ.க்கும் சமம் என்று அதிகார வட்டம் நம்புவதாக அறிவித்திருக்கும் செய்தியை நேருவும், அவர் தம் சகாக்களும் ஏன் வெளிப்படையாக மறுக்கவில்லை! இதிலிருந்து தெரியவில்லையா கதர்க் குல்லாய்களின் ஏசாதிபத்திய வாடை!*

சாஸ்தா—நாகர்கோவில்.

அடுத்த பிறவியில், தான் ஒரு மலையாளப்பெண்ணாகப் பிறக்கவிரும்புவதாகப்ரகாசா சொன்னாரே அது பற்றி உங்கள் கருத்தென்ன?

*நல்ல வேளை: மீண்டும் வடநாட்டுக்காரராகப் பிறந்து, சென்னையின்கவர்னராகவாழ்ந்து ஆண்டு ஒன்றுக்கு நமது வரிப் பணத்தில் பத்து லட்சம் பங்கு பெறாமல், சாதாரணப் பெண்ணாக பிறக்க விரும்புகிறாரே, அது வரை நமக்கு மகிழ்ச்சி தான்.*

பாஸ்கரன்; பரமக்குடி.

(?) கொடியிலே கொள்கையைக் காணும் தி. மு. க. ஏன் கல்லிலே கடவுள் கொள்கையைக் காண மறுக்கிறது?

*நாங்கள் கல்லிலும் கொள்கை இருப்பதை மறுப்பதில்லையே! கல்லில் புதைந்துகொண்டு, பாலாபிஷேகம் பெறும் அந்தக் கொள்கையைத்தான் மூடக் கொள்கை என்கிறோம்!*

மலையான்; சென்னை.

(?) பேனாவால் எழுதும் நீங்கள் எழுத்தாணி எ[illegible] பெயர் வைத்துக்கொண்டது ஏன்?

*மூதாதையரை மறக்காத இனப் பற்றுதான் காரணம்!*

பாலராஜா,—பண்டுலோயா.

(?) இக்காலத்தில் கோவில் பிரகாரங்களில் எண்ணெய் விளக்கு ஏற்றுவதற்குப் பதிலாக, மின்சார விளக்குகள் ஏற்றுகிறார்களே; அதே போல் சுவாமிக்கு தீப ஆராதனை செய்யும்போது சூடன் ஏற்றாமல், 'டார்ச் லைட்' அடித்தால் என்ன?

*இதை, உடனே பதவியை விரும்பிக் கிடக்கும் குன்றக்குடி அடிகளாருக்கு எழுதிக் கேளுங்கள். உங்கள் யோசனையை அவர் நிச்சயம் வரவேற்பார்,*

துரை முருகேசன்-காரமடை;

(?) கலை, மருந்தாக-விருந்தாக மாறுவது எப்போது?

*நோயுள்ள நாட்டில் கலை, மருந்தாக மாறி பிணி தீர்த்துப் புது நாடு கண்டு விட்டால், அங்கே கலை, விருந்தாக மாறும்! விருந்தும் அளவுக்கு மீறினால் மருந்து தேவைப்படும்.*

## இது உண்மையா?

*"தென்னாட்டைப் பொருத்த வரையில் பொருளாதாரச் சீர்திருத்தத்தை முதல் நோக்கமாகக் கொண்டு பணியாற்றினால் கம்யூனிஸ்ட் கட்சி வளராது, எனவேசமுதாய சீர்திருத்தம் தான் முதலில் தேவை" என்று ஒரு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவரது சகாக்களிடம் சொன்னதற்கு, 'ஆமாம், அது மெய்தான்; நமக்கு அழைப்பில்லா விட்டாலும் நாமாக வலிய சென்றாவது சமுதாய நலவளர்ச்சி பற்றிய கூட்டங்களில் இனி மேல் கலந்து கொள்ள வேண்டும். ஆனால் நாம் இந்த பலவீனத்தை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டால் திராவிட இயக்கத்திடம் பெரும் தோல்வி கண்டவர்களாவோம்' என்று அந்த சகாக்கள் சொன்னது உண்மையா?*

## நெல்லைக்கு வாரீர்!

★


*பாளையங்கோட்டையில் நடைபெறும் நெல்லை மாவட்ட தி. மு. கழக மாநாட்டுச் செய்தி கடைசி நேரத்திலே தான் நமக்கு உறுதியாகக் கிடைத்த காரணத்தால் தலையங்கம் தீட்டிட இயலாது போயிற்று. இத்திங்கள், 18–19 நாட்களில் மாநாடுகள் நடைபெற இருக்கின்றன.*

*சமூக சீர்திருத்த மாநாட்டிற்கு தோழர் கவிஞர் கண்ணதாசன் அவர்கள் தலைமை வகிக்கிறார்கள். புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் திறந்து வைக்கிறார்கள். மறுநாள் அரசியல் மாநாடு தோழர் ஏ. வி. பி, ஆசைத்தம்பி அவர்கள் தலைமையில்! தோழியர் பூங்கோதை அம்மையார் திறப்பாளர். ராசேந்திரன் குழுவினரின் "அம்மையப்பன்" நாடகம் நடைபெறுகிறது.*

*வரவேற்புக் குழுத் தலைவர்கள், செயல் வீரர்கள் சிவசாமி, கந்தசாமி ஆகியோரும், சயலாளர்கள் நடராசன், அலிசேக் மன்சூர் ஆகிய செயல் மணிகளும், மற்றும் வரவேற்புக் குழுவினரும் மாநாட்டிற்கு அனைவரையும் அழைக்கிறார்கள் ஆர்வத்தோடு!*

## சகோதரர் திருமணம்

★



அருமைச் சகோதரர் அரங்கண்ணல் அவர்களை, அவர் தமி[illegible] மூலம் பலரும் சந்தித்து மகிழ்ந்திருப்பர். நேசமும், பாசமும் கொண்[illegible] அந்த நேர்மைத் திருமகனார்—திரு ஆரூர் பள்ளியிலே திராவி[illegible] இயக்கப் பூங்காவிலே நுழைந்து—இப்போது 'திராவிடநாடு' து[illegible] ஆசிரியராகப் பணியாற்றுகிற வரையிலே—கட்சிக்காகப் பல கஷ்[illegible] நஷ்டங்களை ஏற்றுக்கொண்ட காளையாவார். அறிஞர் அண்ணாவின் நெஞ்சத்திலே அரங்கண்ணலுக்கு ஒரு சிறப்பான இடம் உண்டு.

செந்தமிழ்ச் சோலை—சிந்தை கவர் தோழர் —- பண்பாடுடை[illegible] நண்பர்—என்றெல்லாம் கூறுவதைவிட, அவர் என் சகோதரர் என்[illegible] பதிலே எனக்கிருக்கும் மகிழ்ச்சி அளவிடமுடியாதது, அத்தகையவரின் வாழ்வு நுழைவு விழா இத்திங்கள், ஒன்பதாம் நாள் விருத்தாசலத்திலே நடை பெற்றது. திரு. வெங்கடாசலம் அவர்களின் திருமகள் தோழியர் **ஆண்டாள் அம்மையாரை** வாழ்க்கைத் துணைவியாகப் பெற்று மகிழ்ந்த விழாவுக்கு, தலைவர் **அண்ணா** அவர்களும் மற்று[illegible] இயக்க நண்பர்களும், திரை யுலக முக்கிய நண்பர்களும் ஏராளமா[illegible] வந்திருந்து சிறப்பித்தனர். இசைவாணர் சிதம்பரம் ஜெயராம் அவ[illegible]களின் இன்னிசை விருந்து நடைபெற்றது. வாழ்வுச் சோலை புகுந்[illegible] அந்த சீர்திருத்த செல்வங்கள், நாட்டினரின் வாழ்த்துக் குரியவர்கள் வாழ்க! வாழ்க!

[ மு. க. ]

## அடுத்த இதழில்!

★

இடமின்மையால் இவ்வாரம் 'குறளோவியம்' இடம் பெறவில்லை—அடுத்த வாரமுதல் தொடர்ந்து இடம் பெறும்.